செறிலூட்டப் பெற்ற
"புதிய நீமியா உரம்"
★ மண் வளமாக்கி
★ பீடை கொல்லி
★ விளைச்சல் பெருக்கி
★ இயற்கையோடு இயைந்தது.
மில்க்வைற் உற்பத்தி

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

"மில்க்வைற் சலவைப் பவுடர்"
அவசர உலகில் திடீர் சலவைக்குப் பாவியுங்கள்.
25 வெற்றுப்பக்கற்றுகளுக்கு ஓர் அப்பியாசக் கொப்பி.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 18 சனிக்கிழமை (01 – 04 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 125

# மண்டூரில் பொலீஸார் மோதல் தவிர்ப்பு மீறல்

# போராளியை தாக்கியதால் அவர் வீரச்சாவு

## விடுதலைப் புலிகள் கடும் ஆட்சேபம்

### அனுருத்தவுக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூரில், பொலீஸார் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மிகப்பெரிய அளவில் மீறியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் தம்மை யார் என்று இனங்காட்டிய பின்னரும், பொலீஸார் அவரைத் தாக்கினர். அதனால் அவர் "சயனைட்" உட்கொண்டு வீரச்சாவடைந்தார்.

இந்த மோதல் தவிர்ப்பு மீறல் மிகவும் பாரதூரமான சம்பவம் என்று விடுதலைப் புலிகள், அரசிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் ஆட்சேபக் கடிதம் ஒன்றை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கு நேற்று அனுப்பிவைத்தார்.

கடந்த 29 ஆம் திகதி. விடுதலைப் புலிகள் போராளியான லெப். சிறினிவாசன் மண்டூரிலிருந்து களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு வசக்... இலில் சென்று கொண்டிருந்த போது, குருமண்வெளியில் பொலிசார் அவரை வழிமறித்தனர்.

தாம் சோதனையிட வேண்டும் எனக்கூறி அவரது பையை சோதித்தபோது பையில் ஒரு சிறிய "ரோச்" இருப்பதைக் கண்ட பொலிசார், 'நீ விடுத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுப்புள்ளி பாதிப்பு: அமைச்சரவைக்கு அறிக்கை

### கல்வி அமைச்சர் உறுதி மொழி

கொழும்பு, ஏப். 1

யாழ். மாவட்ட மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிப் பாதிப்புக் குறித்து விரைவில் அமைச்சரவைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரன உறுதியளித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மாணவர்கள் சார்பில் கொழும்பு சென்ற மாணவர் தூதுக்குழுவினரிடம் அமைச்சர் இந்த உறுதிமொழியைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மாணவர் குழுவினர் கொழும்பில் கடந்த புதனன்று கல்வி, உயர்கல்வி அமைச்சரை சந்தித்து தமது பாதிப்புக்கள் குறித்து விளக்கி கூறினர்.

அப்போது மகஜர் ஒன்றையும் அவர்கள் அமைச்சரிடம் கையளித்தனர்.

மாணவர் குழுவினர் அமைச்சரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை இரத்தினபுரி மாவட்ட எம். பி. திரு. வாசுதேவ நாணயக்கார செய்திருந்தார். (ஐ-3)

## காணமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு பதவிக்காலம் முடிவு

கொழும்பு, ஏப் 1

காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கென நியமிக்கப்பட்ட மூன்று ஜனாதிபதி ஆணைக் குழுக்களினதும் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது.

கடந்த நான்கு மாதகாலத்துக்கு முன்னர் நியமிக்கப்பட்ட இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்களுக்கு காணாமற் போனவர்கள் தொடர்பாக இதுவரை சுமார் 30 ஆயிரம் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

கடந்த காலங்களில் சுமார் 60 ஆயிரம் பேர்வரை காணாமற் போயுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் பொலீஸ், பாதுகாப்பு படையினர், மற்றும் அரச பயங்கரவாதிகள் ஆகியோரால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப் பட்டனர்.

ஜனாதிபதி ஆணைக் குழுக்களுக்கு இதுவரை கிடைத்துள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்து அறிக்கை தயாரிக்க குறைந்தது இரண்டு ஆண்டுகள் தேவைப்படும் என்று ஆணைக் குழு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுடன் முடிவடைந்த ஆணைக்குழுக்களின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-6)

## ராஜீவ் கொலைக்கு மொஸாட் காரணம்

### சேஷன் இப்படிச் சொன்னாராம்

மணிலா, ஏப். 1

ராஜீவ் காந்தியை படுகொலை செய்தது இஸ்ரேல் நாட்டின் உளவு அமைப்பான "மொஸாட்" அமைப்பே என்று இந்திய தேர்தல் ஆணையாளர் சேஷன் சொன்னதாக ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

"ராஜீவ் காந்தி" படுகொலை செய்யப்பட்ட மறுநாள் சேஷன் என்னிடம் வந்து இந்தச் செயல் இஸ்ரேலின் 'மொஸாட்' என்ற கூலிப்படையின் கைவேலை தான் என்று சொன்னார்.

"அதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா என நான் கேட்டேன்.

'என்னை உளவுத்துறை மந்திரியாக்கினால் ஆதாரங்களை கூறுவேன் என்று அவர் கூறினார்

இப்படி சுப்பிரமணியம் சுவாமி கூறினார் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-3)

## அடுத்த கட்டப் பேச்சுக்களில் அரசியல் தீர்வு குறித்தும் ஆராயப்படும்

### சந்திரிகா நேற்று தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 1

"அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் அடுத்த சுற்றுப் பேச்சுக்களின் போது வடபகுதி மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து மட்டும் விவாதிக்கப்படமாட்டாது. நிலையான சமாதானத்தைக் காண்பதற்கான அரசியல் தீர்வு பற்றியும் கவனம் செலுத்தப்படும்"

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு நேற்றுத் தெரிவித்தார்.

இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கான விஜயத்தின் பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுபிற்பகல் அவர் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

போரில் ஈடுபட்ட இரு தரப்புக்கள் எடுத்த எடுப்பில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கண்ட சம்பவம் உலக வரலாற்றில் இல்லை.

விடுதலைப் புலிகளுடன் அரசு ஆரம்பித்துள்ள சமாதானப் பேச்சுகளில் தீர்வு காண்பதற்கு சில சமயத்தில் சில ஆண்டுகள் கூட எடுக்கலாம்.

அரசாங்கம் தனது அரசியல் ஆலோசனைகளை தயாரித்துள்ளது. இதற்காக விடுதலைப் புலிகளிடம் இருந்து பதிலை எதிர்பார்க்கின்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

செய்தியாளர் ஒருவரின் கேள்வி ஒன்றுக்கு ஜனாதிபதி பதிலளிக்கையில் பிரபாகரனை இந்தியாவுக்கு நாடு கடத்தும் பிரச்சினை எழவில்லை இதற்குக் காரணம் ராஜீவ் காந்தியை படுகொலை செய்த சந்தேகத்தின் பேரில் அவருக்கு எதிராக இந்திய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்னமும் முடியவில்லை" என்றார்.

வடபகுதி மக்களுக்கு எவ்வளவு வசதி தேவையோ அவை அனைத்தையும் வழங்க அரசாங்கம் விரும்புகிறது.

ஏற்கனவே அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடை நீக்கப்பட்டிருக்கின்றது.

இதைவிட எரிபொருள் மீதான தடையை நீக்குவதற்கும் சமீபத்தில் அரசு முடிவு செய்துள்ளது என்றும் ஜனாதிபதி கூறினார்.

பூநகரி பிரச்சினை பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி —

பூநகரி முகாமை அகற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மாளிகையில் இருந்த இரத்தினக்கல் லண்டனுக்கு கடத்தப்பட்டதா?

கொழும்பு, ஏப் 1

ஜனாதிபதி மாளிகையில் இருந்து காணாமற்போயுள்ள விலையுயர்ந்த இரத்தினக்கல் ராஜதந்திர மட்டத்தில் உள்ள செல்வாக்கு மிக்க ஒருவரால் லண்டனுக்கு எடுத்துச்செல்லப் பட்டிருக்கலாம் எனத் தற்போது சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் இரகசியப் பொலீஸார் அவ்வாறு நம்புகின்றனர்.

இந்த இரத்தினக்கல் காணாமற் போன சம்பவம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவியான ஹேமா பிரேமதாஸ உட்பட பலரை பொலீஸார் விசாரணை செய்துள்ளனர்.

எனினும் இரத்தினக்கல் தொடர்பான மர்மம் தொடர்ந்து நீடிக்கிறது. (ஐ- 6)

## கண்காட்சிக்குச் சென்ற மட்டு. மேயர் அவமதிப்பு

கொழும்பு, ஏப். 1

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் ஆரம்பமாகவிருந்த ஆதிகால மிருகங்கள் (டைனோசர்) தொடர்பான கண்காட்சி சில அசம்பாவிதங்கள் காரணமாக காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கலாசார பிரிவின் அனுசரணையுடன் நடைபெறவிருந்த இக்கண்காட்சிக்கு மட்டக்களப்பு மாநகர முதல்வர் திரு. செழியன் ஜே. பேரின்பநாயகம் அழைக்கப்பட்டிருந்தார்.

அன்று காலை 9.30மணிக்கு அவர் கண்காட்சி ஆரம்பமாக இருந்த இடத்துக்கு வந்த போது அங்கிருந்து வெளியேறுமாறு கூறி சிலர் அவரை அவமதித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

இது குறித்து மாநகர முதல்வர் மட்டக்களப்பு பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனால் ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து கண்காட்சி காலவரையறை இன்றி ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ)

## பல்கலை அனுமதி மொத்தப்புள்ளி வெளியாகியது

யாழ்ப்பாணம், ஏப் 1

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஜி சீ ஈ உயர் தரப் பரீட்சையின் மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகளும், பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறத் தகுதியுடையவர்களுக்கான மொத்தப்புள்ளிகள் தொடர்பான விவரங்களும் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டன.

கொழும்பில் இருந்து இங்கு எடுத்து வரப்பட்ட மேற்படி பெறுபேறுகளும், மொத்தப் புள்ளி விவரங்களும் நேற்றே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகள் தபாலில் சேர்க்கப்பட்டன. (ஐ-4)

## ஜனாதிபதியின் பேச்சில் பின்னடைவு தெரிகிறது

### எல்மோ பெர்னாண்டோ கருத்து

கொழும்பு, ஏப். 1

சமாதானப் பேச்சுக்கள் பற்றியும் —

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து — ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் விளக்கிக் கூறினார்

அவர் விளக்கிய முறையில் சமாதான முயற்சிகளில் முன்னேற்றத்துக்குப் பதிலாக பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகவே தெரிவதாக பி. பி. ஸி. சிங்கள சேவையின் முகவர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சில பத்திரிகை நிறுவனங்கள் சமாதான முயற்சிகளை முறியடிக்க முயற்சிக்கின்றன என்றும் ஜனாதிபதி நேற்று பகிரங்கமாக குற்றஞ்சாட்டினார். (ஐ-6)

## ஜனாதிபதியின் தகவல் செயலாளர் ராஜினாமா!

கொழும்பு, ஏப். 1

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் தகவல் செயலாளர் திரு. சூலவன்ஸ சிறிலால் நேற்று தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

அவரது ராஜினாமாவுக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை.

பின்னர் அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் —

எதிர்காலத்தில் செய்தித்துறைச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு செய்தியாளர்களுடன் இணைந்து — கைகோர்த்துச் செயற்படப் போவதாக தெரிவித்துள்ளார்.

## ஆனையிறவை திறப்பதே படையினருக்கு பாதுகாப்பு

### ராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஏப். 1

பூநகரிப் பாதையைவிட ஆனையிறவு பாதையை திறப்பது இராணுவத்துக்கு பாதுகாப்பானதொன்றாக அமையும் என்றும்.—

பூநகரிப் பாதையை பொது மக்களின் போக்கு வரத்துக்கு திறந்து விடுவது என்பது பூநகரி இராணுவ முகாம் மீதான அச்சுறுத்தலை அதிகரிக்கச் செய்யும் என்றும்—இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வா கருத்துவெளியிட்டுள்ளார்.

## சமாதான முயற்சி தோல்வியுற்றால் அரசுக்கு இக்கட்டான நிலை வரும்

### ஜே.வி.பி.யின் அச்சுறுத்தல் குறித்து அமல் ஜெயசிங்க

தற்போதைய சமாதான முயற்சிகள் தோல்வி கண்டால் யுத்தத்துக்கு முகம் கொடுக்க முடியாத நிலைக்கு படையினர் உள்ளாக்கப்படுவார்கள். தெற்கில் வளர்ந்து வரும் ஜே. வி. பி. நடவடிக்கையே இதற்குக்காரணம்.

பி. பி. ஸி. [illegible] சேவைக்கு அமல் ஜெயசிங்க மேற்கண்டவாறு [illegible] தார்.

தெற்கில் ஜே. வி. பி. வங்கி கொள்ளையில் ஈடுபடுகிறது. சுவரொட்டிகளை ஒட்டி வருகிறது. ஆயுதங்களை கைப்பற்றுகிறது.

ஜே. வி. பி.யின்வன்செயல்கள் தெற்கில் அதிகரித்துவரும் போது எதிர்த்துப் போராட படையினர் தேவை. [illegible] சமாதான முயற்சி தோல்வி கண்டு வடக்கு – கிழக்கில் யுத்தம் வெடித்தால் அங்கும் படையினர் தேவை.

இரு பகுதி போராட்டங்களை எதிர்க்கக் கூடிய அளவு படையினர் இல்லை. படையினருக்கும் அரசுக்கும் நெருக்கடி நிலை வரும் —

இப்படி அவர் மேலும் [illegible] தெரிவித்தார். (இ-3)

## அரச தரப்புக் குழுவில் கதிர்காமர், ரட்ணசிறி

### பேச்சுத் திகதி குறித்து கடிதம்

கொழும்பு, ஏப் 1

விடுதலைப் புலிகளுடனான அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றவுள்ள அரச தரப்புக் குழுவில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், ரட்ணசிறிவிக்கிரமநாயகாவும் இடம் பெறக் கூடும்.

அரச பேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி 'லங்காதீப'' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

நாலாம் கட்டப் பேச்சை இன்று நடத்தலாம் என விடுதலைப்புலிகள் அரசுக்கு அறிவித்திருந்த போதும். —

பேச்சு ஆரம்பிக்கும் திகதி குறித்து விடுதலைப்புலிகளுக்கு பதில் கடிதம் விரைவில அனுப்பப்படவிருப்பதாக அரச அதிகாரிகள் கூறியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இந்திய பயணத்தை முடித்து திரும்பியுள்ள ஜனாதிபதி சந்திரிகா பேச்சுக்கான புதிய திகதியை முடிவு செய்வார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நாலு போத்தல (4) பால் எடுக்கும் நல்லின சணல் ஆடும், A.I. மூலம் பெறப்பட்ட 1½ மாத மறிக்குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: Dr திருமதி தங்கராஜா, மிருக வைத்தியர், நீர்வேலி. தகவல்: எஸ். பி. வெற்றிவேலு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. [8307]

இனிக்கோழிக் குஞ்சுகள் [Double Colour] ஜில்க்இ வெள்ளைக் கோழிகள், முட்டைகள், கங்கேரியன் பிறாமா, பண்டம் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சிவானந்தம், பழைய தபால்கந்தோர் வீதி [சிவப்பிரகாச வித்தியாசாலைக்கு முன்], சங்கானை. [8463]

புதிய இரும்பு அலுமாரிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சனோ வெல்டிங் வேக்ஸ், 379, பீச்றோட், குருநகர், யாழ்ப்பாணம் (பாடுமீன் ச. ச. நிலையம் முன்பாக) [8464]

குறொம்ரன் மோட்டருடன் இணைக்கப்பட்ட கூவர் எலக்ட்ரிக் பம்ப் R P. M. 2,800 ,750 Wates உள்வாங்கி 1½'', வெளிவிடல் 1'' சொற்பகாலம் பாவித்தது. காட்சி அறைப்பார்வை தொடர்பு: 25, மார்ட்டின் வீதி. [35953]

பால் எடுக்கும் யமுனாபாரி ஆடுகளும் அவற்றின் இருபது நாட்கள் நிரம்பிய கடா, மறிக்குட்டிகளும் விற்பனைக்குண்டு. A. கனகசிங்கம், இல. 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்பாணம். [35979]

பூச்சி நீக்கப்பட்ட இரண்டு மாத பிறவுண் சாம்பல் நிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: றோசாத் தோட்டம், தலங்காவல் பிள்ளையார் கோயில் அருகில், திருநெல்வேலி கிழக்கு [35980]

### கோழிக்குஞ்சு விற்பனை

கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. [Loman] சேவல் குஞ்சுகள் விலை 15/- மல்வம் வீதியூடாக சிங்கம் வீதி, உடுவில். [8304]

கோல்டன் கொமற் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி (Bar முன்பாக) யாழ்ப்பாணம். [35962]

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler மற்றும இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் இறைச்சி விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள். வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப் பலகை உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர். [35983]

### கோழி எரு விற்பனைக்கு

கோழி எரு தொகைய விற்பனைக்கு உண்டு முதல் வருபவர்களுக்கு முன்னுரிமை ''ஜனமித்ரா'', பிறவுண் வீதி (கலட்டிச் சந்தி அருகில்). யாழ்ப்பாணம். [35924]

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கைக்குள் பரப்பு 2½ அளவுள்ள காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு: நா. கணேசு கிராம உத்தியோகத்தர் கனகசபை வீதி, மானிப்பாய். [8460]

### தேவை

வயதான கணவன் மனைவி இருவருக்கும் வீட்டோடு இருந்து சமையல் வேலையும் ஏனைய வீட்டுப் பணிவிடைகளும் செய்ய 35-50க்கும் இடைப்பட்ட தகுதியான பெண் உடன் வரவும். தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். 25. மாட்டின் வீதி [35954]

### VENUS ANTENNA

To View Ruppavahini, Madras Programmes. Fixing Venus Antenna Repairing Antennas, Radios, T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284. Stanley Road (Ariyakulam Junction) Jaffna, Branch: Kandy Road, Chavachcheri. (C-951)

### தவறிவிட்டது

தாவடிக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் பச்சையும் வெள்ளை நிற வயர்களால் ஆன எனது கைப்பையும், டயறி, குடும்ப பதிவு அட்டை, வடபகுதிக்குள்ளே நுழைவதற்கான அனுமதி அட்டை ஆகிய ஆவணங்களோடு 3 கடிதங்களும் 27-3-95இல் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து C/o 45, கே. கே. எஸ். றோட், சுன்னாகம் உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். [8306]

### H-IRON

16 அடி நீளம் கொண்ட 8 அடி X 4 அடி எச்-அயர்ன் எம்மிடம் விற்பனைக்கு உள்ளது. ''மில்க்வைற்''. [சி-874]

### மணமகன் தேவை

கனடாவில் உத்தியோகம் வகித்து சமீபத்தில் வரவிருக்கும் யாழ். இந்து, 37 வயதுடைய அச்சுவினி 1ம் பாதம், மிதுன லக்கினம், கிரகபாவம் 28, செவ்வாய் குற்றமற்ற, அழகான 5' 3'' உயரமுடைய மணமகளுக்கு பொருத்தமான மணமகன் பெற்றார் தேடுகின்றனர். தொடர்பு: இல. 7, விபுலானந்த வீதி, கொழும்புத்துறை. [35952]

## ஜப்பான் கராட்டி அசோசேசன் சோட்டோகான் சிறீலங்கா

சராத்தே நேர்முகப் பரீட்சை 02-04-1995 நண்பகல் 12 மணிக்கு சுன்னாகம் மான்ஸ் பாடசாலையில் நடைபெறும்.

சான்றிதழ்கள் உயர் பரீட்சையாளர்
க. இராமச்சந்திரன் 6ஆவது கறுப்புப்பட்டி
அவர்களால் வழங்கப்படும
கராத்தே போதனாசிரியர் க. கேதீஸ்வரன்
கறுப்புப்பட்டி

(8308)

## மாபெரும் கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

நீர்வேலி
**ஐக்கிய விளையாட்டுக் கழகம்**
நடத்தும்
மாபெரும் கரபந்தாட்ட சுற்றுப் போட்டியில்

★ செற்றப் — A, B பிரிவுகள்
★ 6 பேர் கொண்ட ஓவர் கேம்
★ பெண்களுக்கான வலைந்தாட்டம்

என்பன இடம்பெறும்.

விண்ணப்ப முடிவு திகதி: **10-04-1995**

தொடர்பு முகவரி;
செயலாளர்,
ஐக்கிய விளையாட்டுக் கழகம்,
நீர்வேலி ச தி, நீர்வேலி. (35982)

## அந்தியேட்டி அழைப்பும் வீட்டுக் கிருத்தியமும்



**செல்வன் நாகராசா சிவசங்கர்**
(சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன்)

மண்ணில்: **05-08-1979**
மகேசன் நிழலில்: **04-10-1994**

புலோலி கிழக்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையைவசிப்பிடமாகக்கொண்ட வரும் புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தான அறங்காவலர் திரு தி நாகராசா அவர்களின் சிரேஷ்ட புதல்வரான சிவசங்கரின் அந்தியேட்டிக்கிரியை இன்று(01-04-1995) கன்னாரின் கொழும்புத்துறை இல்லத்தில் நடைபெறும் மறு நாள் [02-04-1995] நடை பெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் பதியபோசனத்திலும் கலந்து கொண்டு அவரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார் உறவினர், நண்பர்கள். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— என்றும் நினைவுடன் —
குடும்பத்தினர்.

87, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (35983)

## WANTED

**PART TIME ENGLISH TYPIST**

Wanted an experienced, Part-time. English Typist.

Call over with full bio-data on or before **3-4-95** during office hours.

PERSONEL MANAGER
**NEW UTHAYAN PUBLICATIONS (Pvt.) Ltd.**
Navalar Road, Jaffna.

## பெரும் வரவேற்புடன் விற்பனையாகிறது!

### அஷ்டலக்ஷ்மியின் பொன்னான வெளியீடுகள்

**பொது அறிவுக் களஞ்சியம்** — 180 பக்கங்கள் விலை ரூபா 90/-

அறிவியல், மருத்துவம், பொது அறிவு, விஞ்ஞானம், அரசியல் போன்றவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 4000 க்கு மேற்பட்ட வினா-விடைகள் அடங்கிய அற்புதத் தொகுப்பு ஆண்டு 5 தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பயன்படக் கூடியது.

**தமிழ் வேதத் திரட்டு** — 120 பக்கங்கள் விலை ரூபா 50/- சிறப்புப் பிரதி 75/-

வெற்றிகரமான வாழ்க்கை அமைய சமயகுரவர் அருளிய 34 பதிகங்கள் பொன், கண், பொருள், கல்வி முதலியவைகள் பெறுவதற்கும், பிணிகள் தீரவும், குடும்பத்தில் வரும் எல்லாவிதமான இடர்களும் நீங்கவும், சுகமாக பிரசவிக்கவும், திருமணம் நடைபெறவும், பகைமை தீரவும், ஆன்மலாபம் அடையவும், வியாபாரத்தில் நன்மை அடையவும் நவக்கிரக தோஷங்கள் நீக்கவும், மனதில் நிம்மதி தோன்றவும், தீவினைகள் அகன்று நல் வினையைப் பெறவும், இயமன் அணுகாமலிருக்கவும் இம்மையில் எல்லாவித நலன்களையும் பெறுவதற்கும் அம்மையே சிவலோகம் ஆள்வதற்கும் திருமுறைகளுள் பதிகங்கள் அருளப்பட்டுள்ளன (மேலட்டைகள் லெமனேஷன் செய்யப்பட்டுள்ளன)

தொகுப்பு, பதிப்பு:
**ஆறுமுகம் கந்தையா B.A., J P.,**
அஷ்டலக்ஷ்மி அதிபர்,
கைதடி.

கிடைக்குமிடங்கள்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீகாந் புத்தகசாலை, யாழ். புக்கவுஸ், மண்டலேயா யாழ்ப்பாணம், சிவா அச்சகம், கைதடி. [சி-952]

## 3-ம் ஆண்டு இதய அஞ்சலி



செல்வி
**துஷாந்தி பஞ்சாட்சரலிங்கம்**
[முன்னாள்/ நல்லூர் சென். பெனடிக் பாடசாலை மாணவியும் யா/ இந்து மகளிர் கல்லூரி மாணவியும்]

அன்னையின் மடியில்: 17-09-1981
ஆண்டவன் திருவடியில்: 01-04-1992

அன்பான அப்பாவும் அம்மாவும் அருமைச் சகோதரரும் நண்பான உறவினரும் நலமுடைய நல்லோரும் என்றும் பாணங்குள அம்மனின் பூங்காவனத் திருநாளில் துஷாந்தி உன்னை நினைத்து உருகுகின்றார். உயிர் அணையாய் என வருந்தி உங்கள் பிரிவால் துயருறும்;

அப்பா, அம்மா, அக்கா, தம்பிமார்,
உற்றார், உறவினர்.

ஆ. பஞ்சாட்சரலிங்கம்,
அமலேஸ்வரி களஞ்சியம்,
யாழ்ப்பாணம்.

49, கச்சேரி,
நல்லூர் வீதி,
மூத்தவிநாயகர்
கோயிலடி, நல்லூர்.

[8469]

மல்லாகம்

## பழம்பதி திருமுருகன் வளம் பொலி மா விழா



பங்குனித் திங்கள் 18 ஆம் நாள் ரேவதி நட்சத்திரம் மீன ராசியில் 01-04-1995 சனிக்கிழமை 12-00 மணிக்கு வெற்றிக்கொடி ஏறி 15 நாட்கள் விழா நடைபெறும்.

இத் திருநாளில்
மாலை **5-00** மணி தொடக்கம் **6-00** மணிவரை
சிவானந்த வாரிதி, வாரியார் வாரிசு,
அருள்மொழியரசு
**சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர்**
அவர்களின்

### இன்னிசைச் சொற்பொழிவு

1ஆம் நாள் — இந்திரனுக்கருளிய சிபமாமுகன்
2ஆம் நாள் — பாட்டியும் பரம சிவபாலனும்
3ஆம் நாள் — தருமிக்கருள் புரிந்த தயாபரன்
4ஆம் நாள் — அன்புடைத் தோன்றல்
5ஆம் நாள் — அன்பனுக்கிரங்கிய அபிராமிதேவி
6ஆம் நாள் — சூடிக்கொடுத்த சுடர்க்கொடி
7ஆம் நாள் — சனீஸ்வரனின் சாகசங்கள்
8ஆம் நாள் — காலனை வென்ற காரிகை
9ஆம் நாள் — பட்டினம் தந்த பரமஞானி
10ஆம் நாள் — இாவஞ்சிக் கருளிய இளையோன்
11ஆம் நாள் — திருப்புகழ் தந்த திவ்ய திரலோன்
12ஆம் நாள் — பரந்தாமன் பதமடைந்த பதிவிரதை
13ஆம் நாள் — சீதா கல்யாணம்
14ஆம் நாள் — கஜமுகன் கல்யாணம்
16ஆம் நாள் — பக்த பிரகலாதா (இரவு 8,30மணி)

★ பழம்பதி உங்கள் உளம் பதியட்டும் ★

சிவஸ்ரீ. மு. நகேந்திரசர்மா,
பழம்பதி தேவஸ்தான
ஆதீனகர்த்தா.

மல்லாகம். (9)

## புதிய வகுப்புகள்

★ Cake Icing (கேக் ஐசிங்)
★ Sugar Craft (மாச்சீனி அலங்காரம்)
★ Fondant Icing (மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள்)
★ Make up and Hair Dressing (ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும்)
★ Flower Making (Silk Ribbon, Stocking Net மலர்ச் செண்டுகள் [Bouquets] தயாரித்தல்.)

**16-04-1995** முதல்
ஆரம்பமாக இருக்கின்றன.

தொடர்பு கொள்ளவும்.

**YOGI HOME SCIENCE ACADEMY**
நாயன்மார் வீதி,
கச்சேரி நல்லூர் றோட் (முத்திரைச் சந்தையடி)
நல்லூர், யாழ்ப்பாணம்.
[சி-637]

## கிராமிய தகவல் சேகரிப்பாளர் தேவை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளி விபரக் கிளையின் தகவல் திரட்டல் தொழிற்பாட்டுக்கு கிராமிய தகவல் சேகரிப்பாளர் தேவை.

தகைமை:
க. பொ. த (சா/த) இல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், தமிழ் ஆகியவற்றில் திறமைச் சித்தி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

வயது:
18—40 வயதிற்குள் (ஆண், பெண் இருபாலாரும்)

பொருத்தமாவர்கள் எதிர் வரும் 30-04-1995 ற்கு முன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளி விபரக் கிளையுடன் தொடர்பு கொள்ளவும். வேலை விவரம், உதவு தொகை விவரம் என்பன நேரில் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**புள்ளி விவரக்கிளை,**
**முதன்மைச் செயலகம்,**
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
தாவடி.
[சி-868]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழாவை முன்னிட்டு

# சாரதா சமிதி ஏற்பாட்டில் பேச்சு, கட்டுரை போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 1

இலங்கையில் ஸ்ரீ சாரதா சமிதி நிறுவப்பட்ட 25ஆவது ஆண்டு பூர்த்தி — வெள்ளி விழாவை — முன்னிட்டு மேற்படி சமிதி நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையேயான பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மே மாத கடைசி வாரத்தில் மாவட்ட ரீதியிலான போட்டிகள் நடைபெறும், இறுதிப் போட்டிகள் ஜூன் மாதத்தில் கொழும்பில் நடைபெறும்.

பேச்சுப் போட்டிகளுக்கான தலைப்புகளாக, கீழ்ப் பிரிவுக்கு — ''அம்மா என்றொரு தெய்வம்'', அன்னை (சாரதாமணி அம்மையார்) ஆற்றிய தொண்டு,'' 'அன்னை காட்டிய வழி'' என்னும் விடயங்களும்—

மத்திய பிரிவுக்கு ''அன்னை காட்டும் அருள் நெறி'', குருதேவரும் அன்னையாரும்'', ''அன்னையார் வாழ்வில்– தியாகமும் சேவையும்'' என்னும் விடயங்களும்—

மேற்பிரிவுக்கு— ''அன்னையாரின் ஆத்மீக நெறி'', ''பெண்களும் ஆன்மீக நிலையங்களும்', ''சமயப்பணிகளில் பெண்கள்'' என்னும் விடயங்களும் வழங்கப்பட்டுள்ளன.

கட்டுரைப்போட்டியில்.

மத்திய பிரிவு— 'பெண்ணிற் பெருந்தகை அன்னை ஸ்ரீ சாரதா தேவி', 'சகோதரி நிவேதிதையின் சமூகப் பணி' என்னும் ஏதாவது ஒரு தலைப்பில் 300 சொற்களுக்கு குறையாத வகையிலும்.

மேற்பிரிவு— 'இல்லறத்தில் துறவறம் பேணிய பெருந்தகை, சமூக ஒருமைப்பாட்டில் அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் பங்கு' என்னும் ஏதாவது ஒரு தலைப்பில் 500 சொற்களுக்கு குறையாமலும் நிகழ்வுகளின் அடிப்படையில் ஆக்கங்கள் அமைதல் வேண்டும்.

கவிதைப் போட்டி பொதுவானது. கவிதைகள் ''சக்தியே எம்மைச் சமைத்தது காண்'', ''மேவியே ஒன்றாய் வாழ்ந்திடுவோம், மேதினியில் நாம் உயர்த்திடுவோம்'' என்னும் தலைப்புகளில் 24 வரிகளுக்கு குறையாமல் அமைதல் வேண்டும்.

கவிதைகள் அன்னை சாரதையின் வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் ஆக்கப்படல் வேண்டும்.

கவிதைகள், கட்டுரைப் போட்டிகளுக்கான ஆக்கங்கள் யாவும், அவை மாணவர்களின் சுய ஆக்கம் என அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் மே 19 ஆம் திகதிக்கு முன்னர் ''சாரதா குடீர்'', 59 விவேகானந்த வீதி கொழும்பு– 6 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (ஒ–14)

## செஞ்சிலுவை தேர்தல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 1

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் 9 பிரிவுகளில் சில பதவிகளுக்கான தேர்தல்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை அவ்வப்பிரிவுகளில் நடைபெறவுள்ளன. (ஒ-14-15,

# வடக்கு - கிழக்கு எம். பிக்களுடன் பீரிஸ், காமினி பொன்சேகா பேச்சு

கொழும்பு, ஏப். 1

நீதி அரசமைப்பு விவகார வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸும் வடக்குகிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவும் நேற்று முன்தினம் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிர்வாக ரீதியாக நிலவி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அந்தப் பேச்சுக்களில் ஆராயப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி, ஐ.தே. கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த எம்.பிக்கள் அதில் கலந்து கொண்டனர். (ஐ–3)

மட்டக்களப்பு பஸ் டிப்போவுக்கு

## இராணுவம் ரூ. 10 லட்சம் வாடகை செலுத்த வேண்டும்

கொழும்பு, ஏப். 1

மட்டக்களப்பு இராணுவம் தனது தேவைகளுக்காக பஸ்களை பயன்படுத்தியதன் பேரில், மட்டக்களப்பு மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச்சபைக்கு சுமார் 10 லட்சம் ரூபாவை வாடகையாகச் செலுத்த வேண்டி உள்ளது.

இந்தத் தொகை இன்னமும் செலுத்தப்படவில்லை. இதனால் இச்சபை பெரும் நிதி நெருக்கடிக்கு ஆளாகி உள்ளது.

இராணுவம் தனது தேவைகளுக்காக இந்த பஸ்களை பயன்படுத்துவதனால் — போக்குவரத்து சேவைகளும் அடிக்கடி தடைப்பட்டுப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது, (ஒ-5)

## தலைவலிக்கு ''மஸாஜ்''! அமெ. டாக்டர்கள் சிபார்சு

வாஷிங்டன், ஏப். 1

தலைவலிக்கு மாத்திரைகள் உபயோகிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் தலைவலி என்றால் ''மஸாஜ்'' மூலம் அதனை நிவிர்த்தி செய்து கொள்ள முடியும்.

அமெரிக்க நரம்பியல் அறுவைச்சிகிச்சை டாக்டர்கள் இவ்வாறு சிபார்சு செய்கின்றனர்.

கழுத்தின் மேற்பகுதியில் இருந்து மூளைக்குச் செல்லும் ஒருதசையிழையத்தின் பாதிப்பே தலைவலி ஆகும்.

உரிய ''மஸாஜ்'' முறை மூலம் தலைவலியைக் குணமாக்கலாம் என்கின்றனர் டாக்டர்கள்.

இதற்கென தொலைபேசி மூலம் ''மஸாஜ்'' செய்பவரை வரவழைக்கும் சேவை ஒன்றும் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஒ–14)

## பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், ஏப். 1

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கத்தின் பிரிவுபசாரவிழா மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நாளை ஞாயிறுமுற்பகல் 9-30 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கலந்து கொள்வார்.

சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி திரு. றெ. இருதயநாதன், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஐ)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தால் நடத்தப்படும் அமரர் ஈ.வே குமரையா ஞாபகார்த்த போட்டிகள் மறு அறிவித்தல் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிர்வாக சேவைக்கு தெரிவான 13 தமிழர்

கொழும்பு, ஏப். 1

இலங்கை நிர்வாகசேவைக்கு ஆட்சேர்ப்பதற்காக 1993இல் நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் அடிப்படையில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப் பட்ட 107 பேரில் 13 பேர் தமிழர்களாவர்.

அவர்களின் பெயர்கள் வருமாறு :-

எம். கோபாலரத்தினம், எஸ். முரளீதரன், கே. தெய்வேந்திரம், ஆர். அன்னம்மா குருஸ், கே. தயராசா, வீ. தவராசா, எம். கணேசமூர்த்தி, எஸ். நவரத்தினம், என். இனையமதி, எஸ். சத்தியசீலன், எஸ். சிறிதரன், டி. ஜீவநாதன், ஏ. சிவபாதசுந்தரம். (ஐ)

## கைதான 3 தமிழரும் விடுதலை

கொழும்பு, ஏப்ரல். 1

பழைய நாடாளுமன்றக் கட்டடத்தைப் படம் எடுத்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு வாசுதேவ நாணயக்கார இவர்களது விடுதலை தொடர்பாக பொலிஸ்மா அதிபர், பிராங்டி சில்வாவுடனும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையுடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்ததை அடுத்தே இவர்கள் மூவரும் விடுவிக்கப்பட்டனர்.

மாத்தளை ரத்வத்தை தோட்டத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சந்திரசேகரன் நல்லையா விக்னேஸ்வரன், பெரியான் சுப்பிரமணியம் ஆகிய மூன்றுதமிழ் இளைஞர்களுமே விடுதலை பெற்றவர்களாவர். (ஐ)

## கராத்தே சங்க அங்குரார்ப்பண கூட்டம்

யாழ். மாவட்ட கராத்தே சங்கம் அமைப்பதற்கான பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கோண்டாவிலில் உள்ள அரசியல்துறையின் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல கராத்தே பயிற்றுநர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது. (ஐ)

## 147 ஆவது வயதில் மரணம்

சீனாவின் மிக அதிக வயதான மனிதர் நேற்றுமுன்தினம் காலமானார். அவருக்கு வயது 147.

தாம் ஒரு போதும் புகை பிடித்ததோ, மது அருந்தியதோ இல்லை என்றும்—

கடின உழைப்பும் பிரமச்சரியமும் தான் தமது நீண்ட ஆயுளுக்கு காரணம் என்றும் அவர் கூறிவந்தார் என சீன அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ–5)

# அதிகாரிகள் மட்டுமே கலந்து கொள்ளும் பேச்சுக்களை சமாதானப் பேச்சு என்று கொள்வது அர்த்தமற்றது!

அரசு – புலிகள் பேச்சுவார்த்தையில் அரச தரப்பில் அதிகாரிகள் மட்டுமே கலந்து கொள்கிறார்கள். அரசியல்வாதிகளோ அமைச்சர்களோ பேச்சுக்களில் இன்னும் பங்குபற்ற வில்லை.

இந்த நிலையில், கடந்த மூன்று கட்டங்களாக நடந்த பேச்சுக்களைசமாதான பேச்சு என்று சொல்வது அர்த்தமற்றது.

சமாதானப் பேச்சுவார்த்தை என்பது ஓர் அரசியல் விடயம். இதில் அதிகாரிகள் முடிவு எடுப்பது எப்படி?

இவ்வாறு அரசாங்கத்தின் மிகவும் பொறுப்பு மிக்க சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான பொது நிர்வாக அமைச்சர் திரு. ரட்ணசிறி விக்கிரமநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைச்சரின் பேட்டி விவரம் வருமாறு :-

கேள்வி: அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெறும்சமாதானப்பேச்சுக்களை அனைவரும் கவனித்த வண்ணமுள்ளனர். இந்தப் பேச்சு வார்த்தைகளின் தற்போதைய நிலை என்ன?

பதில்: அரச தரப்புப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மூன்று சுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளன. இருப்பினும் அப்பேச்சு வார்த்தைகளின் தற்போதைய நிலைவரம் குறித்து நான் அறியேன். எனவே இது குறித்துக் கருத்து வெளியிட விரும்பவில்லை.

கேள்வி: நீங்கள் அரசைச் சேர்ந்த அமைச்சர், எனவே சமாதானப் பேச்சுக்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என ஏன் கூறுகிறீர்கள்?

பதில்: நான் இப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றவில்லை. அங்கு இடம் பெற்ற விடயங்களை நான் அறியேன்

கேள்வி: ஆனால் மூத்த அமைச்சர் என்ற வகையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சனை பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டுமல்லவா?

பதில்: இப்பேச்சுவார்த்தைகள் ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் ஜனாதிபதி பணிமனையினால் முற்றிலுமாக ஒழுங்கு செய்யப்பட்டது. எனவே அது தொடர்பான விடயங்களை ஜனாதிபதியே அறிந்து வைத்துள்ளார். அவ்விடயங்கள் பற்றி ஆராயவில்லை. மறுபுறத்தில் இதை சமாதானப் பேச்சுவார்த்தை எனக் கூறமுடியாது.

கேள்வி: அரச தகவல் சாதனங்களாலும், அமைச்சர்களாலும் இது சமாதானப் பேச்சுக்கள் என்றே அழைக்கப்படுகின்றது. எனவே இதை சமாதானப் பேச்சுவார்த்தை அல்லவென நீங்கள் எவ்வாறு கூறமுடியும்?

பதில்: இதை சமாதானப் பேச்சுவார்த்தை என எவ்வாறு அழைக்க முடியும்? சமாதானப் பேச்சுவார்த்தை என்பது ஓர் அரசியல் விடயம். இடம்பெற்ற எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் அரசியல்வாதிகள் பங்கு கொள்ளவில்லை. அதிகாரிகள் மட்டுமே பங்குபற்றினர். எனவேதான் இதை சமாதானப் பேச்சுவார்த்தை எனக் கூறமுடியாது. சமாதானப் பேச்சுக்களுக்கான அடித்தளத்தை ஏற்படுத்தும் பேச்சுவார்த்தைகள் என்றே நான் இவற்றை நோக்குகிறேன்.

கேள்வி: நல்லது. நான்காவது சுற்றுப் பேச்சு வார்த்தைக்கு இவ்வளவு காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

பதில்: கடந்த மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது யாழ். குடாநாட்டில் மின்சாரம், நெடுஞ்சாலைகள், மருத்துவமனைகள், நூல்நிலையம் ஆகியன புனரமைக்கப்பட வேண்டுமென விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கோரினர். அது பற்றி அதில் பங்கு கொண்ட அரச தரப்புப் பிரதிநிதிகள் அரசிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி ஒரு குழுவை நியமித்துள்ளார். அந்தக் குழு இந் நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் எனக்கூடி ஆராய்ந்தது. இந் நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்க பல வெளிநாடுகள் விருப்பத்தைத் தெரிவித்துள்ளன.

கேள்வி; இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற வகையில் மார்ச் 28 ஆம் திகதி யாழ்ப்பாணம் போகவுள்ளதாக பத்திரிகைகள் தெரிவித்தன. அவ்வாறு செல்வதாயின் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் அரசைச் சேர்ந்த முதலாவது அரசியல்வாதி நீங்கள்தானே.

பதில்: இல்லை. நான் போகவில்லை. யாரோ பத்திரிகைகளுக்குத் தவறான தகவல் வழங்கியுள்ளனர் அரச அதிகாரிகள் அதாவது அரச அதிபர், மாநகரசபை ஆணையாளர் போன்ற அதிகாரிகள் ஊடாக அந் நடவடிக்கைகளை மேற்கொள்ள யோசித்துள்ளேன்.

கேள்வி: இப்புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு எவ்வளவு நிதி செலவிடப்படவுள்ளது.

பதில்: நாங்கள் நிறைவேற்ற எதிர்பார்ப்பது சுமார் 48 கோடி செலவினங்களைக் கொண்ட ஒரு குறுகியகாலத் திட்டமாகும் முதலில் மாநகர சபை எல்லைக்குள் மின்சாரம், வீதிகள், மருத்துவமனைகள் ஆகியனவற்றைப் புனரமைத்தல். யாழ்.நூல் நிலையத்தை உரிய முறையில் புனரமைக்க சிறிது காலம் செல்லும்.

கேள்வி: இந் நடவடிக்கைகளை எப்போது ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளீர்கள்?

பதில்: நாளையே ஆரம்பிப்பதாயினும் நாங்கள் தயார். ஆனால் விடுதலைப் புலிகளின் அபிப்பிராயம் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. இதுவே தாமதத்திற்கான காரணமாகும்.

கேள்வி: விடுதலைப் புலிகளின் அபிப்பிராயம் என்ன என்பது தெரியாது எனக் கூறுகிறீர்கள் அதுபற்றி விரிவாகக் கூறுங்கள்.

பதில்: கடந்த சுற்று பேச்சு வார்த்தைகளின்போது விடுதலைப்புலிகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்; அவற்றில் சில நிறைவேற்றப் படவில்லை எனவும் கூறுகின்றனர். நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளுகிறோம் உதாரணமாக பூநகரி முகாமை அகற்றுமாறு விடுதலைப் புலிகள் கோரினர். நாங்கள் அந்த முகாமை 500 மீற்றர் பின்னால் நகர்த்தியுள்ளோம். இவ்வாறான சில விடயங்கள் புனர் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கத் தடையாயுள்ளன.

கேள்வி: புனர்நிர்மாண நடவடிக்கைகள் குறித்துக் கண்டறிய தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள அரச அதிபர் போன்ற அதிகாரிகளுக்குப் பணிப்புரைகள் வழங்கப் பட்டுள்ளனவா?

பதில்: இல்லை. [illegible] வழங்கப்படவில்லை விடுதலைப்புலிகள் தயாரில்லை எனில் எமது அதிகாரிகளை அங்கு அனுப்ப முடியாது. உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என அவர்களால் உறுதியுரை வழங்கப்படும் வரை எமது அதிகாரிகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பமாட்டோம்.

> அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க வழங்கிய இந்தப் பேட்டி 'லக்பிம' மார்ச் 26 ஆம் திகதிய இதழில் வெளியாகியது.

## அமைச்சர்களுக்கு ஏதும் தெரியாது என்கிறார் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா!

கேள்வி: நான்காவது சுற்றுப் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு இந்நிலைமை தடையாக அமையாதா?

பதில்: எனக்குத் தெரியாது. இதுபற்றி என்னிடம் கேட்க வேண்டாம். பேச்சுவார்த்தை வேறு விடயம். புனர் நிர்மாணம் வேறு விடயம்.

கேள்வி: சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கு முன்னர் புனர் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமா?

பதில்: அதுபற்றிச் சரியாகக் கூறமுடியாது இருப்பினும் இரு தரப்பினருக்குமிடையே நல்லுறவு ஏற்படவேண்டுமாயின் அதற்காக சில தியாகங்களை மேற்கொள்ள வேண்டும்.

கேள்வி: அதாவது பேச்சுவார்த்தைகளையும் புனர்நிர்மாண நடவடிக்கைகளையும் சமாந்தரமாக மேற்கொள்ளலாம் எனக் கூறுகிறீர்களா?

பதில்: பத்திரிகைகள் அவ்வாறு செய்யமுடியாது எனத் தெரிவிக்கின்றன. ஆனால் எனக்கு அவ்வாறு தோன்றவில்லை. நாங்கள் புதிதாக எதையும் மேற்கொள்ளவில்லை. இருப்பனவற்றையே மாத்திரம் புனரமைக்கவுள்ளோம்.

கேள்வி: விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அரசுக்குக் காலக்கெடு விதித்து அனுப்பிய கடிதம் பற்றி..

பதில்: நானும் பத்திரிகையில் பார்வையிட்டேன் நான் சமாதானக் குழுவில் இடம் பெறவும் இல்லை. பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றவுமில்லை. விடுதலைப்புலிகள் ஜனாதிபதியுடன் மேற்கொள்ளும் பேச்சுக்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. தெரியாத விடயம் பற்றிக் கருத்துக்கூறி நான் துரோகியாக விரும்பவில்லை.

கேள்வி: நல்லது. விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் பற்றிய சரியான நிலையை அறியாத உங்களால் எவ்வாறு புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்?

பதில்: எந்தவித பிரச்சினையுமில்லை எனக்குத் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் எழும் பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் என்ன தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்து நான் ஜனாதிபதியிடமிருந்து கேட்டறிவேன்.

கேள்வி: இவ்வாறான பின்னணியில் தமது பாதுகாப்பில் வைத்திருந்த போர்க்கைதிகளான 15 பொலீஸாரை விடுதலைப் புலிகள் விடுதலை செய்ததை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?

பதில்: எதை மனதில் வைத்து பொலீஸாரை விடுதலை செய்தார்கள் என்பதை நான் அறியேன். பின்னணி எதையும் அறியாமல் கருத்துக் கூறுவது கடினம்.

கேள்வி: சமாதான முயற்சிகள் தோல்வியடையின் மீண்டும் மோதல்கள் ஏற்படக்கூடும். அப்போது புனரமைப்புகளின் கதி என்ன?

பதில்: நான் முன்னரே கூறியுள்ளேன் ஏதாவது தியாகங்களை மேற்கொள்ளாமல் சமாதானத் தீர்வினைக் காணமுடியாது. மேலும் அவதானமின்றி இப்பிரச்சினையை எவ்வாறு தீர்க்க முடியும்? மேலும் புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்குச் செலவிடப்படும்நிதி எமது நிதி அல்ல, அனைத்தும் வெளிநாட்டு உதவிகளேயாகும்.

கேள்வி: இனப்பிரச்சினைக்குத் தீர்வு தயார் என அமைச்சர் கதிர்காமர் கூறுகிறார் அதே வேளை சமாதானப் பேச்சுவார்த்தைகளும் நடைபெறுகின்றன. இது குறித்த சரியான, தெளிவான நிலை என்ன?

பதில்: ஆம். எமது தீர்வு தயார். ஆனால் எமது தீர்வை விடுதலைப் புலிகள் ஏற்கத் தயாரா என்பதுதான் பிரச்சினை இது குறித்து உடன்பாடு ஒன்றை எட்டும் நோக்கிலேயே நாங்கள் இரு தரப்பினரும்பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுகிறோம்.

கேள்வி: இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் போதும் விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதி பிரேமதாசாவுக்குமிடையேஇடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போதும் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை எனக் குற்றஞ்சுமத்தப்பட்டது இப் பேச்சுவார்த்தையில் அவ்வாறான பிரதிநிதித்துவம் வழங்கப்படுமா?

பதில்: இன்னும்சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகவில்லை என நான் முன்னரே கூறியுள்ளேன். சமாதானப் பேச்சுக்களுக்கான அடித்தளத்தை உருவாக்கும் முயற்சிகளே இப்போது நடைபெறும் பேச்சுகளாகும். உரிய சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது அவ்வாறான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன. [ஒ–10]

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின்
54 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்படும்
அஞ்சலோட்ட விழா
ஏப்ரல் 8, 9 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்
பாடசாலை கழக அணிகள் விண்ணப்பிக்க இறுதித் தினம் 01 – 04 – 95
விண்ணப்பப்படிவங்களைப் பெற!-
செயலாளர்,
யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயந்திர இயக்குநர்கள் தேவை

''ஹைடில்பேர்க்'' அச்சு இயந்திரம் இயக்குவதில் தேர்ச்சியுள்ள இயக்குநர்கள் தேவை. பயிற்சிக் காலத்துக்குப் பின்னர் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. முன்னர் பணிபுரிந்த இடங்களில் பெற்ற வேலைத் திறன் சான்றிதழ்களின் பிரதிகளையும் விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பவும்.

25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: **05 — 04 — 1995**

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



## யாழ். வணிகர் கழகம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

பொதுமக்களின் நலன்கருதி எதிர்வரும் புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு 01 - 04 - 95, 02 - 04 - 95, 08 - 04 - 95, 09 - 04 - 95 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் எமது கழக எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் முழுமையாக திறந்து வியாபாரம் செய்யலாம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவு கொடுக்கப்படவேண்டும் என்பதையும் அறியத் தருகிறோம்.

நன்றி

— யாழ். வணிகர் கழகம்.

[(ஸி-876)]



## ஆறாம் மாத ஆத்மார்த்த அஞ்சலி

பருத்திநகர் புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தான ஆதீனகர்த்தா

திரு. நாகராஜாவின் புதல்வன்
நா. சிவசங்கரின்
ஆறாம்மாத ஆத்மார்த்த அஞ்சலி.

தாயின் மடியில்: 05 — 08 — 1979
ஆண்டவன் அடியில்: 04 — 10 — 1994

அன்றொரு நாள் மார்க்கண்டேயருக்காக
மறலிபட்டபாட்டை - உன்னின்
எம் பசுபதீஸ்வர ரென்செய்தார்
அன்பர் நம் அல்லல் தனை ஒழிக்க மறந்தாரே.
மாலையிட்டு மங்கலமாய் விளக்கேற்றியுனை
ஆசையுடன் பார்ப்பாரே ஆதீனம் - இன்று
கன்றை இழந்த காராம்பசுவைப் போல்
கதறி மனம் கலங்க வைத்தாயே - கறைக்கண்டா
உனக்கேதும் காணிக்கை குறைந்ததுவோ
காத்திடுவாயென்று காலமெல்லாம் காலடியின்
இடந்தோமே
சங்கரை என்று நீ காண வைப்பாய்
கண்கலங்கி அழுவதனால் பயனென்ன
காலம் விடப்போவதில்லை.
எமக்கும் இதுவே கதியென்றெண்ணி
சங்கரை சாலவே சென்று சங்கரனார் பாதம்
சார்வதற்கு பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி!

இவ்வண்ணம்
— தேவஸ்தான பிரதம குருக்கள்.

[35956]



உ
ஸ்ரீ காமாட்சி துணை
ஸ்ரீ விராட் விஸ்வப்பிரம்மணே நம

## யாழ் வண்ணை காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்
(நாச்சிமார் கோவில்)

### மஹோற்சவ விசேட விழாக்கள்
**01 - 04 - 1995 — 17 - 04 - 1995**

| | | | | |
|---|---|---|---|---|
| 01 04 — 1995 | சனிக்கிழமை | கொடியேற்றம் | முற்பகல் | 11 00 மணி |
| 09 — 04 — 1995 | ஞாயிற்றுக்கிழமை | பூந்தண்டிகை | மாலை | 6 00 மணி |
| 10 — 04 — 1995 | திங்கட்கிழமை | மஞ்சம் | மாலை | 6-00 மணி |
| 11 04 1995 | செவ்வாய்க்கிழமை | கைலாசவாகனம் | மாலை | 6 00 மணி |
| 12 — 04 — 1995 | புதன்கிழமை | சப்பரதம் (பெரிய சப்பரம்) | மாலை | 6-00 மணி |
| 14 - 04 — 1995 | வெள்ளி கிழமை | இரதோற்சவம் | | |
| | | வசந்தமண்டப பூசை | காலை | 7 00 மணி |
| | | இரதத்தில் ஆரோகணித்தல் | காலை | 9-00 மணி |
| 15 — 04 1995 | சனிக்கிழமை | தீர்த்தோற்சவம் | | |
| | | வசந்தமண்டப பூசை | காலை | 7-00 மணி |
| | | தீர்த்தம் | காலை | 8-30 மணி |
| 17 04 - 1995 | திங்கட்கிழமை | | | |
| | | திருவிளக்கு பூசை | மாலை | 4 30 மணி |
| | | பூங்காவனம் | மாலை | 6-00 மணி |

நாச்சிமார் கோவில் வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

தர்மகர்த்தா சபை

குறிப்பு 15 - 4 - 95 சனிக்கிழமை மாலை 6-29 — 8-20 இடம்பெறும் சந்திர கிரகணத்தையொட்டி தீர்த்தோற்சவ நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அம்பாள் அருள் வேண்டி நிற்கும்
மங்கள பட்டுச்சோலை சுன்னாகம் (35984)


# காலி கடற்கரை பகுதியில் பெற்றோலியம் உண்டா?

## அரசுக்கு அறிக்கை

கொழும்பு, ஏப். 1

காலிப் பிரதேசக் கடற்கரையை அண்டி பெற்றோலியம் இருக்கும் சாத்தியம் இருப்பதாக அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மொனராகல தொடக்கம் திருகோணமலை வரையான பகுதியில் கோபால்ட், பிளாட்டினம் மற்றும் பெறுமதி வாய்ந்த உலோகப் படிமங்கள் உள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பூகர்ப்பவியல் பேராசிரியர் பி. டபிள்யு. விதானகே தயாரித்த இந்த அறிக்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக விரைவாக ஆராய்ந்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சைப் பணித்துள்ளார்.

காலி தொடக்கம் யால வரையான கடற்கரைப் பிரதேசத்தில் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சிகளை செய்வதிலும், அதற்குத் தேவையான தொழில் நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குவதிலும் ஆஸ்திரேலியா ஆர்வமாக உள்ளதாக பேராசிரியர் விதானகே கூறினார்.

காலிப்பகுதியில் பெற்றோலியம் இருக்கும் சாத்தியம் குறித்த தமது அறிக்கையை பேராசிரியர் விதானகே முந்திய ஐ. தே. க. அரசிடமும் டி. பி. விஜேதுங்கா பதவிக் காலத்தில் சமர்ப்பித்திருந்தார். (அ)

## அரியாலையில் சுதேசிய திருநாள்

யாழ்ப்பாணம், ஏப். 1

அரியபுலை 76 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் முதலாவது நடன, நாடகப் போட்டிகள் இன்று இரவு 7 மணி முதல் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அரங்கில் நடைபெறவிருகின்றன.

நடனம், ஊமம், நடிப்பு, சிறுவர், இசை, ஆங்கிலம், சமூக நாடகங்கள் இன்றைய போட்டியில் இடம் பெறவிருக்கின்றன. (இ-3)

## மட்டக்களப்பு நகரில் சுவரொட்டிகள்

கொழும்பு, ஏப். 1

விடுதலைப் புலிகளின் வீரமரணமடைந்த போராளிகளுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன என்று கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று கூறுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன என்றும்—

பின்னர் அவ்விடத்துக்கு வந்த பொலீஸார் சுவரொட்டிகளை அகற்றினர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# ஊர்தி வரி அட்டை பெற கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 1

மோட்டார் ஊர்திகளுக்கு 1995 ஆம் ஆண்டுக்கான வரி அட்டை பெறுவதற்கான கால எல்லை எதிர்வரும் 8 ஆம்திகதி சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் ஊர்திகளுக்கான 95 ஆம் ஆண்டு வரி அட்டை பெறுவதற்கான கால எல்லை நேற்று 31 ஆம்

(6 ஆம் பக்கம் பார்க்க)


## சிற்றூழியர் தேவை

சிற்றூழியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க. பொ. த சாதாரண தரம் சித்தியடைந்த 25 வயதுக்கும், 30 வயதுக்கும் உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

சிற்றூழியர்களாகப் பணிபுரிந்த முன் அனுபவம் உள்ளவர்களுக்கும், தோட்ட வேலை செய்த அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

சிபார்சு செய்யக்கூடிய இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு **07 - 04 - 1995** ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி
யாழ்ப்பாணம்



## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் தியாகராஜா கேசவன்
(மல்லாகம்)

என் முன்னால் இருக்கும் மல்லைப் பழம்பதி ஆனைமுகன், ஆறுமுகன் அருள்பெற்று, என்னைப் பெற்றவர் ஆசி கூற பெரியவர்கள் வாழ்த்தி நிற்க, அக்காமார் அணைத்து முத்தமிட, என் வீட்டிலிருக்கும் அப்பப்பா குடும்பத்தினர் அள்ளி அணைக்க, மற்றும் பெரியப்பா குடும்பத்தினர் பிரியமுடன் வாழ்த்தி நிற்க மாமாமார், மாமிமார், சித்தப்பா, சித்திமார், மச்சாளிமார், மச்சான்மார், அக்காமார், அண்ணாமார், உற்றார், உறவினரும் உவகையுடன் வாழ்த்த கொம்மி அம்மம்மா குடும்பத்தினர், புத்தூர் அம்மப்பா குடும்பத்தினர் அனைவரும் எனை வாழ்த்த நல்லாசி கூறிய அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகள் கூறுவதில் மகிழ்வடைகிறேன்.

தி. கேசவன்

பழம்பிள்ளையார் வீதி.
மல்லாகம் (8311)


# விவசாய செயற்பாடுகளில் பனை வளங்களின் பங்கு

கற்பகதருவெனப் போற்றப்படும் பனை மரமானது பல வகைகளிலே மனிதருக்குப் பயன்களை வழங்கிப் பாதுகாத்து வருகிறது. விவசாயத்திலே பனைமரம் ஆற்றும் பங்கு மிகவும் பெரியது, அரியது, என்றும் எம்மால் போற்றிப் பேசப்பட வேண்டியது. காரணம் நவீன வசதிகள் இல்லாத நிலையிலும் பனைமரம் எமக்குக் கைகொடுக்கும்.

விவசாயத்தில் மண்வளம், நீர் பாச்சுதல், பயிர் பாதுகாப்பு களை அகற்றல், களஞ்சியப்படுத்தல் இப்படிப் பலபல வகைகளிலே பனைமரம் பயன் வழங்கி வருதலை நாம் என்றுமே மறக்க முடியாது.

### சிறந்த பசளை

வளமான மண்ணிலேதான் தரமாகப் பயிர்கள் விளையும். சிறந்தபயனையும் தரும். இந்த வகையிலே மண்வளம் பேணலில் பனையின் பங்கு அதி முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். பனையின் ஓலையைப் பச்சையாகவோ அல்லது கூரை, வேலி என்பவற்றுக்குப் பாவித்து இரண்டு ஆண்டுகளின் பின்னரோ பசளையாக உபயோகிக்கலாம்.

மண்ணிலே பசளையாகப் பனை ஓலைகளைத் தாழ்ப்பதன் மூலம் மண்ணுக்கு நல்ல காற்றோட்டம் கிடைப்பதுடன் நீர் கொள்ளும் தன்மையும் அதிகரிக்கும். நீர் மண்ணிலிருந்து எளிதில் வெளியேற மாட்டாது. அத்துடன் மண் தொய்வாக மெதுமையாக மெத்தென்றிருப்பதனால் வேர்கள் நல்ல முறையிலே பரந்து வளரும் வாய்ப்புண்டு.

பொதுவாக புகையிலை, வாழை, நெல் முதலிய பயிர்களுக்குப் பனை ஓலை பசளையாக இடப்பட்டு வந்துள்ளது. கிழங்குத் தாவரங்களிலிருந்து நல்ல கிழங்கு விளைச்சலைப் பெறுவதற்குப் பனை ஓலை சிறந்த பசளையாகும் என்பது அனுபவ ரீதியாகக் கண்ட உண்மையாகும்.

பனைஓலை பசளையாக உபயோகிக்கப்பட வேண்டின் ஆண் பனைகளிலிருந்து ஒன்றுவிட்ட ஒரு வருடத்தில் பனை ஒன்றில் 25 ஓலைகள் வரை வெட்டப்படலாம். ஆட்டெரு மாட்டெரு பெறும் சந்தர்ப்பங்களிலும் எருவைத் தரும் விலங்குகளுக்குப் பனை ஓலை உணவாகக் கொடுக்கப்படுவதை நாம் சிந்திக்க வேண்டும்.

### விவசாய நடவடிக்கைகளில்

குளங்களிலிருந்து வயல்களுக்கு நீர்பாய்ச்சுதலில் சீலாப்பட்டை எனப்படும் பனையோலையிலான ஒரு வகைப்பட்டை பயன்படுத்தப் படுகிறது. தோட்டங்களில் பயிர்கள் சிறு கன்றுகளாக நடப்பட்டவுடன் குத்து தண்ணீர் ஊற்றுதலிலும் பனை ஓலைப் பட்டைகள் உபயோகமாகின்றன. முக்கியமாக தோட்டங்களில் பட்டை இறைப்பு என்ற செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் அனைத்துமே பனையின் பயன்கள் என்பது பெருமையுடன் கூறப்படவேண்டிய ஒன்றாகும்.

இரண்டாவது தமிழீழப் போரின் ஆரம்பத்தின் பின்பு தமிழீழ மக்களின் மீது ஸ்ரீலங்கா அரசு விதித்த பொருளாதாரத் தடையின் விளைவாக எவ்வித கதியும் அற்ற நிலையிலே தமிழீழ மக்கள் விவசாயத்திலே முன்பு கையாண்ட பட்டை இறைப்பையே நடைமுறைப் படுத்தினர். இதில் துலா ஆடுகால் சேத்துக்குத்தி, பேணத்தடி, பட்டைக் கொடி பட்டைக் கயிறு, பட்டை என்றுஎல்லாமே பனம் பயன்கள் என்பது குறிப்பிடத்தக்கவை.

தோட்டங்களிலே நாட்டப்பட்ட பயிர்கள் வளர்ந்து பயன்தந்து முடியும் வரை அவைகளைச் சேதப்படுத்தக்கூடிய விலங்குகளிடமிருந்து அவைகளைப் பாதுகாப்பதற்கு இடப்படும் வேலிகளுக்கும் பனை மட்டைகள், சலா [illegible] அத்துடன் [illegible] போன்ற தாவரங்கள், படருவதற்கென அமைக்கப்படும் பந்தல்கள் பனைமட்டை நார்களினாலும் அமைக்கப்படும்.

கோரைப்புல் தோட்டங்களில் வளரும் களைகளில் ஒன்றாகும். இது நிலத்தினுள்ளே வேர்க்கிழங்குகளைக் கொண்டிருப்பதால் இதை இலகுவில் அழித்துவிட முடியாது. எனவே பனை ஓலைகளால் இவற்றை மூடி விடுவதனால் கிழங்குகள் வரை அழுகி அழிகின்றன. பின்பு ஓலைகளைத் தாழ்வை செய்து பயிர் வளர்க்கப்படலாம்.

விலங்கு வேளாண்மையில் கால்நடைகளுக்குப் பாதுகாப்பு நோக்கோடு அமைக்கப்படும் தொடர்புல் குடில், கொட்டில் என்பன அமைத்தலில் பனைமரமே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. நுகத்தையும் கலப்பையையும் இணைக்கும் ஏர்க்கால் பனை மரத்தால் ஆனதே. ஏற்றக் காலையும் நுகத்தையும் இணைக்கும் அந்துக்கயிறும் பனம் நார்க் கயிறாகும். தோட்டங்களில் பாத்திகளை அளந்து வடிவமைத்தலில் பயன்படுத்தப்படும் தோட்டக்கொடி எனப்படும் கயிறு பனைமட்டை நாரினாலேயே செய்யப்படுகிறது.

பனை ஓலைப்பட்டைகள் பனம்மட்டை நார்க்கயிறுகள் என்பன ஈரலிப்பாக வைத்திருக்கப்படின் உக்கிப் பழுதடையும் கடும் உலர்வாகப் பேணப்படின் முறியும் தன்மையடையும். எனவே இதைக் கவனத்தில் கொண்டு இவை தகுந்த நிலையில் வைத்துப் பேணப்படுதல் அவசியமாகும். நீரிறைக்கும் பட்டைகள் இறைப்பின் பின்பு புகையூட்டி உலர்த்தப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. நன்றாகப் பேணி உபயோகித்தால் இவற்றின் உபயோக காலம் ஐந்து வருடங்கள் வரை நீடிக்கும் என்பது அனுபவ ரீதியாக அறியப்பட்டுள்ளது.

நெல், சாமை, குரக்கன் போன்ற தானியங்கள் காயவிடுதலுக்கு பனையோலையிலான கதிர்ப்பாய்களே உபயோகிக்கப்படுகின்றன.

பனை ஓலையினால் பெரிய பெட்டிகள் இழைக்கப்பட்டு அவற்றினுள் தானிய வகைகள் இடப்பட்டு வேப்பிலையினால் மூடி அந்துப்பூச்சி தாக்காத வண்ணம் களஞ்சியப்படுத்தப்படும் முறை எமது நாட்டில் நடைமுறையிலிருந்தது.

பனம் ஈர்க்குகளினால் பின்னப்படும் வெங்காயக் கூடைகள் வெங்காயத்தை பாதுகாத்து அனுப்புவதற்கு உபயோகிக்கப்படுகின்றன. இவ்விதமாக விவசாயத்தில் பனை மிகவும் அரிய பங்காற்றி வருகின்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்


## அறிவித்தல்

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

### பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் விசேட பொதுக்கூட்டம்

கலந்துரையாடல்:
1995—04—08 சனிக்கிழமை
முற்பகல் 10.30 மணி

விசேட பொதுக்கூட்டம்:
1995—04—16 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9-30 மணி

இடம்: யாழ்/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை மண்டபம்

மேற்படி கலந்துரையாடலிலும், விசேட பொதுக் கூட்டத்திலும் பொதுச்சபைப் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு: இரு நிகழ்வுகளுக்குமான அழைப்புக்கள் பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கு தபால் மூலம் தனித்தனி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நா. தவநாதன், தலைவர்
ஐ. சிங்கராசா, செயலாளர்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய். 31-03-1995. (ஸி-867)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காலவர் வீதி
யாழ்ப்பாணம்

## தெற்கில் அசம்பாவிதங்கள்

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்துக்கு அருகில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை சாதாரண குற்றச் சம்பவமாகக் கொள்ளமுடியாது.

கொழும்புக் கோட்டையில் பாதுகாப்பு மிகுந்த ஜனாதிபதி மாளிகைக்கு அருகே உள்ள செலான் வங்கியில் ஆயுதபாணிகள் நடத்திய கொள்ளையும் ஒரே நாளில் நடைபெற்றுள்ளது.

இரண்டு அசம்பாவிதங்களையும் ஒரே குழுவினரே செய்திருந்தாலும் சரி, வெவ்வேறு குழுக்கள் செய்திருந்தாலும் சரி இந்தச் சம்பவங்கள் தெற்கில் நிலவும் அமைதிக்கு ஏற்பட்டிருக்கும் சோதனை என்றே கொள்ளப்படவேண்டும்.

பாதுகாப்புகள் நிறைந்த நாடாளுமன்றப் பகுதியில் பொலிஸாரை எதிர்த்துத் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது என்றால் அரசு செய்யும் பாதுகாப்பை முறியடிக்க வல்ல பலமுள்ள ஆயுதக்குழு ஒன்று தெற்கில் உள்ளது என்று அர்த்தம்.

இச்சம்பவங்கள் இனிமேல் தெற்கில் நடக்கக்கூடிய பெரிய வன்செயல்களுக்கு முன்னோடியாக இருக்கக்கூடும். பாதுகாப்புப் பகுதியினரின் பலத்தை, அவர்களின் உஷாரைச் சோதித்துப் பார்க்கும் சம்பவங்களாகவும் இருக்கலாம்.

1988, 1989 ஆம் ஆண்டுகளில் ஜே. வி. பியினரின் பெரிய அளவிலான வன்செயல்கள் இடம் பெறுவதற்கு முன்னர், இது போன்ற சம்பவங்கள் நடந்ததை மறந்து விடுவதற்கில்லை.

வங்கிக் கொள்ளையும் மிகவும் பாதுகாப்பு நிறைந்த, சனசந்தடி மிக்க ஜனாதிபதி மாளிகை உள்ள பகுதியில் நடந்திருக்கிறது. இந்தச் சம்பவத்தையும் வெறும் கொள்ளையாகப் பார்க்க முடியாது.

ஜே. வி. பி. போன்ற ஓர் இயக்கம் தனது செயற்பாடுகளுக்குப் பணம் திரட்டும் நடவடிக்கைகளில் ஒன்றாகவும் நோக்கலாம். 1988, 1989 ஜே. வி. பி. வன்செயல்களுக்கு முன்னரும் இவ்வாறு பெரும் கொள்ளைகள் தெற்கில் நடந்தன.

அண்மைக்காலங்களில் ஜே. வி. பியினர் வெளிப்படையாகவே அரசுக்கு எதிராக வேலை நிறுத்தங்களைத் தூண்டியும், சுவரொட்டிப் போராட்டங்களை நடத்தியும் வருவது கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும்.

இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், தெற்கில் அமைதியின்மையைத் தோற்றுவிப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் முனைப்புடன் நடக்கின்றன என்று கொள்வது தவறாகாது.

தெற்கில் மீண்டும் ஒரு 1988, 1989 கால நெருக்கடி தோன்றாமல் தடுப்பதில் அரசு தன்னைத் தயார்ப்படுத்த வேண்டிய தேவை உருவாகிறது என்பது மட்டும் நிச்சயம்.

இத்தகைய தயார்ப்படுத்துதலில் வடக்கு - கிழக்கு போரை நிறுத்துவது பிரதான இடத்தை வகிக்கிறது. போரை முடிவுக்குக் கொண்டு வருவது என்பது இனப்பிரச்சினைக்குத் தமிழர் ஏற்கக்கூடிய ஒரு தீர்வைக் கொண்டு வரும் அரசின் துணிச்சலிலும் திறமையிலுமே தங்கி உள்ளது.

எவ்வளவுக்கு எவ்வளவு இனப்பிரச்சினை விரைந்து தீர்க்கப்படுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு தெற்கில் வன்செயல்கள் நடவாமல் தடுப்பது இலகுவாகும்.

இன்னுமொரு பக்கத்தால் பார்த்தால், தமிழர்களுக்குத் திருப்தி தரக்கூடிய ஓர் தீர்வை அரசு வழங்குவதையும், ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொண்டு பேரினவாதிகளின் ஆதரவுடன் ஜே வி பி. போன்ற அமைப்புகள் தெற்கில் அமைதியைக் கெடுக்கலாம்!

ஆனால் —

தெற்கின் எதிர்ப்பின் மத்தியிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வை கண்டு விட்டால், அங்கு மட்டுமே நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய பலம் தேவைப்படும். இல்லையேல் இருதலைக் கொள்ளி எறும்பு போல இருபக்க நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்.

---

யாழ். பல்கலைக்கழகத்தில்

# மருத்துவ கண்காட்சி நாளை ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடமும் விஞ்ஞானமன்றமும் இணைத்து நடத்தும் மருத்துவக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமையாழ் மருத்துவ பீடத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து 9 ஆம் திகதி வரை நடைபெறும்.

இக்கண் காட்சி அமைப்பு, 9 பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

நரம்பு— மூளைத் தொகுதி சிறுநீரக— சனனித்தொகுதி, உளவியல் பகுதி, சுவாச, சுற்றோட்டத்தொகுதிகள், பற்சுகாதாரம், அகச்சுரப்பிகள், உணவுக்கால்வாய் தொகுதி, ஏனைய தொகுதிகளும் முதலுதவியும், சுகவாழ்விற்கான வழிமுறைகள் என்பன இந்த ஒன்பது பிரிவுகளுமாகும்.

ஒவ்வொரு தொகுதியினதும் அமைப்பு, தொழிற்பாடு நோய்கள், அவற்றைத்தடுக்கும் வழி முறைகள், அவற்றினால் ஏற்படும் சிக்கல்கள் என்பன விளக்கப்படும்.

சுகவாழ்வுக்கான வழிமுறைகள், முதலுதவிப் பகுதிகளில் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய, கடைப்பிடிக்க கூடியவழி முறைகளும் விவரிக்கப்படும்.

இக்கண்காட்சி மூலம் எமது மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் சிறந்த நிலைக்கு உயரும் என்று தாம் எதிர்பார்ப்பதாக் கண்காட்சி குழு தெரிவித்துள்ளது.

ஒவ்வொருவரும் தமது குருதி அமுக்கம், மூளையின் செயற்பாடு, நிறை, உயரம் போன்றவற்றை அறிவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

பீட வளாகத்தின் மேற்கு வாயிலில் நுழைவுச் சீட்டுகள் விற்பனையாகும். விருப்பப்படி எந்த ஒரு பிரிவையும் முதலில் பார்வையிடலாம்.

உலகபல்கலைக்கழக சேவை நிலையத்தில் யாழ் பல்கலைக்கழக வெளியீடுகளும் விற்பனைக்கு வைக்கப்படவுள்ளன. [ஓ-14]

## 2 வருட கடூழிய சிறை!

கொழும்பு, ஏப். 01

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்காக, தவறான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்த ஒருவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2வருட கடூழியச் சிறைத் தண்டனையையும், ஆயிரத்து ஐநூறு ரூபா அபராமும் விதிக்கப்பட்டு உள்ளது.

இத் தண்டனையை காலி நீதிவான் வழங்கினார். (ஓ- 5)

# மட்டு. செயலக கூட்டத்தில் ஆங்கிலத்தில் முழக்கம்!

கொழும்பு, ஏப். 1

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தின் போது கலந்து கொண்ட பலரும் ஆங்கிலத்திலேயே தமது கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் அனைவரும் தமிழை தாய்மொழியாகக் கொண்டவர்களே.

இதுபற்றி உடனடியாக எழுந்து ஆட்சேபனை தெரிவித்த ஆரையம்பதி பிரதேச சபைப் பிரதித் தலைவர் பரிபூரண முதலியார், நூறுவீதம் தமிழ் அதிகாரிகள் கலந்து கொண்ட இக்கூட்டம் ஆங்கிலத்தில் நடத்தப்படுகின்றபோது தமிழ்மொழி அமுலாக்கம் பற்றிய வாய்ப்பேச்சில் பிரயோசனம் இல்லை, என்று குறிப்பிட்டார்.

தமிழர்களே தமிழைப் புறக்கணிக்கின்றார்கள் என்றும் அவர் வேதனையுடன் கூறினார்.

இதனை அடுத்து இனி கூடுதலானவரையில் தமிழிலேயே கூட்டம் நடத்தப்படும் என்றும் பாதுகாப்பு இணைப்பதிகாரிக்கும் நாம் பேசுவது விளங்க வேண்டும் என்பதற்காகவே ஆங்கிலத்தில் கூட்டம் நடத்தப்பட்டதாகவும் மட்டு அரச அதிபர் ஏ. கே. பத்மநாதன் தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா, ஜோசப் பரராஜசிங்கம் எம். பி. ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பி. செல்வராசா, கே. துரைராசசிங்கம், அலி சாகிர் மௌலானா மட்டு. அரச அதிபர் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். [ஓ-14-5]

# கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு கருவிகள்

## கப்பலில் எடுத்துவர அனுமதி

ஐ. நா. உணவு, விவசாய அபிவிருத்திதிட்ட உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்துக்குத் தேவையான உபகரணங்களை கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நிலையத்தில் கட்டட வேலைகள் 85 ஆம் ஆண்டு பூர்த்தியடைந்திருந்தபோதும் உபகரண வசதி இல்லாததால் அது செயற்பாடு இன்றிமூடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-3)

# வட-கிழக்கு அபிவிருத்தி அதிகாரசபை நிறுவ முயற்சி

## அரசு விதிமுறைகளை வகுக்கிறது

கொழும்பு, ஏப். 1

வடக்கு - கிழக்கு புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள வட - கிழக்கு அபிவிருத்தி அதிகார சபையை அமைக்க தேவையான விதிமுறைகளை வகுப்பதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வட - கிழக்கில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள "வட - கிழக்கு அபிவிருத்தி அதிகார சபை" என்ற அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் 3 ஆம் கட்டப் பேச்சுக்களின் போது அரச குழுவிடம் கேட்டிருந்தனர்.

இந்த அமைப்பை உருவாக்க தேவையான சட்ட திட்டங்களை வகுப்பதில் அரசு ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (ஓ-3)

# வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவுச் சபை இணையம்

## திருமலை மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப் 1

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவுச் சபைகளின் இணையம் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த 25 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சபைகளின் தலைவர், செயலாளர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சபைகளின் இணையத்தை ஆரம்பிப்பதற்கான யாப்பை ஆராய்ந்து எதிர்வரும் ஆவணி மாதத்தில் இயங்க வைப்பதற்கான குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் எடுக்கப்பட்ட சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

★ கிராமிய வங்கிகளின் சமாசம் ஒன்று யாழ் மாவட்டத்தில் அமைக்கப்பட வேண்டும்.

★ யாழ் மாவட்டத்தில் கூட்டுறவுத் [illegible] மீள இயங்க வைக்க வேண்டும். (ஓ-4)

---

புலிகளின் குரல் வானொலியில்

01 - 04 - 1995
சனி இரவு

★ 8-02 — புரட்சிக்குரல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கலந்துரையாடுவோம் — "இன்றைய போக்குவரத்துப் பிரச்சினைகள்"

02 - 04 - 1995
ஞாயிறு காலை

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
சனி மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாப் போட்டி
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — பாமாலை
★ 6-15 — என் தெரிவு

## கடனுதவி

தென்மராட்சி, ஏப் 1

தமிழர் புனர்வாழ்வுக்கழக தென்மராட்சிப் பிரிவினர் கைதடி கோயிலாக்கண்டிக் கிராமத்தில் உள்ள 14 பயனாளிகளுக்கு மீன்பிடி அபிவிருத்திக் கடனாக தலா 5 ஆயிரம் ரூபா வீதம் கடந்தவாரத்தில் வழங்கினர். [ஓ-117]

## கிராம அலுவலருக்கு நாட்குறிப்பேடு

யாழ்ப்பாணம் ஏப். 1

அரசாங்கத்தினால் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்படும் நாட் குறிப்பேடு யாழ். மாவட்டச் செயலகத்திற்கு எடுத்துக் வரப்பட்டுள்ளது.

கடந்த 5 வருடங்களாக யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த கிராம சேவையாளர்களுக்கு இந்த நாட்குறிப்பேடு அனுப்பி வைக்கப்படாமல் இருந்து வந்தது.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் இந்நாட் குறிப்பேடுகளை எடுத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். [ஓ-4]

## பரீட்சை அலுவலர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப் 1

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி சீ ஈ. சாதரண தரப் பரீட்சையில் கடமையாற்றிய அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் ஏபரல் முதல் வாரத்தில் காசோலைகளாக அனுப்பி வைக்கப்படும்.

இதேவேளை பூரணப்படுத்தப்படத சில நாட் குறிப்பேடுகள் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க பிரதி நிதிகளால் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்படும் எனவும்—

அவற்றை பூரணப்படுத்தி மேற்படி சங்கப் பிரதிநிதிகளிடம் கையளிக்கும் படசத்தில், பரீட்சைத் திணைக்களம் இவர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-14)

## புலமைப்பரிசில மாதிரி வினாத்தாள்

யாழ்ப்பாணம், ஏப் 1

இவ்வருடம் முதல் அமுல் செய்யப்படவுள்ள புதிய ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் பரீட்சைத் திணைக்களம், தேசியகல்வி நிறுவகம் என்பனவற்றால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மாதிரி வினாத்தாள்கள் ஏப்ரல் மாத கடைசி வாரத்தில் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று [illegible] கல்விப் பிரிவைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (ஓ-14)

---

# இலங்கைக்கான நிதி உதவியை ஜேர்மன் அதிகரிக்கும் சாத்தியம்

## தூதுக்குழு இன்று செல்கிறது

கொழும்பு, ஏப். 01

ஜேர்மன் அரசாங்கம், இலங்கைக்கு வருடாந்தம் வழங்கும் நிதி உதவி இந்த வருடம் அதிகரிக்கப் படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

இது தொடர்பாக, பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு மூன்று பேர் கொண்ட தூதுக்குழு ஒன்று இன்று ஜேர்மனுக்குச் செல்ல உள்ளது

திறைசேரியின் செயலாளரான தயான் லியனகே தலைமையிலான இந்தத் தூதுக் குழுவில் —

நிதி திட்டமிடல் அமைச்சைச் சேர்ந்த லால் செனவிரத்ன மற்றும் திருமதி நாணயக்கார ஆகியோர் அடங்கி உள்ளனர்.

கடந்த வருடம் ஜேர்மனி 3 கோடி 50 லட்சம் டொச் மார்க்கை இலங்கைக்கான நிதி உதவியாக வழங்கி இருந்தது.

இலங்கை அரசின் நிதிக் கொள்கைகளில் ஜேர்மன் அரசு திருப்தி கண்டிருப்பதாகவும், அதனால் அரசின் சமூக, பொருளாதார திட்டங்களிக்கு உதவ ஜேர்மனி முன்வந்துள்ளதாகவும் தூதுக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் ஜேர்மனியின் நிதி உதவியை பயன்படுத்துவதற்கு என 38 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளன தாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ஓ-5]

# புனர்வாழ்வு அமைச்சு கட்டடத்தை படம் எடுத்த இளைஞர் கைதானார்

கொழும்பு, ஏப். 1

கொள்ளுப்பிட்டியில் உள்ள துறைமுக, கப்பற்றுறை புனர்வாழ்வு அமைச்சு கட்டடத்தைப் புகைப்படம் எடுத்ததாக சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

ஹட்டனைச் சேர்ந்த இந்த இளைஞரை அமைச்சின் பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்து பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அமைச்சின் எதிர்ப்பக்கம் உள்ள தேவாலயத்தையே தாம் புகைப்படம் எடுத்ததாகவும்—

அந்த ஆலயத்தின் கட்டடப் பகுதிக் காணி விற்பனைக்கு விடப்பட இருப்பதால், அதனை படம் எடுத்து அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்காகவே தாம் புகைப்படம் எடுத்ததாகவும்— அந்த வாலிபர் தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வேறு ஒருவருடன் வந்ததாகக் கூறப்படும் இந்த வாலிபர் தலைக்கவசத்துடன் காணப்பட்டார் என்றும்—

இவருடன் வந்த மற்றைய நபர் திடீரென தலைமறைவு ஆகியுள்ளார் என்றும் இந் நடவடிக்கை தமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [ஓ-ஐ-5]

# பெண் உட்பட நால்வருக்கு சவூதியில் தலை துண்டிப்பு!

விபச்சார விடுதி ஒன்றினை நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் ஒரு பெண் உட்பட நான்கு பேரை சவூதிஅரேபியா அரசு சிரச்சேதம் செய்துள்ளது.

சவூதிஅரேபிய உள்துறை அமைச்சு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் கடந்த திங்கட்கிழமை இவர்கள் நால்வருக்கும் சிரத்சேதம் நிறைவேற்றப்பட்டது.

இவர்களில் இருவர் பாகிஸ்தானியர்கள்; ஒருவர் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர். எனினும் சிரச்சேதம் செய்யப்பட்ட பெண் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது தெரிவிக்கப்படவில்லை.

பெண்களைக் கற்பழிப்பவர்களை, கொலைகாரர்களை, போதைப் பொருள் கடத்தல்காரர்களை, கிரிமினல் குற்றவாளிகளை — இஸ்லாமிய ஷரிஅத் சட்டத்தின் கீழ் சவூதி அரசு சிரச்சேதம் செய்கின்றது. (ஓ-5)

# தேசிய ஓய்வூதிய கொள்கை விரைவில் வகுக்கப்படும்

## அமைச்சர் பத்திரன கூறுகிறார்

கொழும்பு, ஏப். 01

ஓய்வூதியர்களுக்கு மேலும் பல சலுகைகளை அளிக்கும் முகமாக தேசிய ஓய்வூதியக் கொள்கை ஒன்று விரைவில் வகுக்கப்படவுள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. ரிச்சர்ட் பத்திரன இத்தகவலை தெரிவித்துள்ளார்.

அடுகம, அக்மினை தொகுதியின் ஓய்வூதியர் சங்க 9ஆவது வருடாந்தக் கூட்டத்தில் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஓய்வூதியம் பெறுவோருக்கான மேலதிக கொடுப்பனவுத் தொகை ரூபா. 260/- தற்போது கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கொடுக்கப்பட வேண்டிய சம்பள உயர்வுகளை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் — என்றார்

## ஆலயங்களில்

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகி பதினைந்து தினங்கள் நடைபெறும்.

14ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

உற்சவ நாள்களில் தினமும் இசையரங்கு நிகழ்ச்சி இடம்பெறும். (ஓ-111)

★ ★ ★

சுழிபுரம் - பறாளாய் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலய இலட்சார்ச்சனை இன்று சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. ஆறு தினங்களும், மூன்று வேளையிலும் பெருமானுக்கு சண்முகார்ச்சனை நடைபெறும். (ஓ-28)

# தாதியர் பயிற்சி நெறிக்கு இம்முறை 62 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ். போதனாவைத்திய சாலை தாதியர்பயிற்சிப் பாடசாலையின் 95ஆம் ஆண்டிற்கான முதலாண்டு பயிற்சிநெறி கடந்தமாதம் 17 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுவை சேர்ந்த வைத்தியசாலைகளில் இருந்து தெரிவான 62 தாதிய பயிற்சி மாணவர்கள் இப்பயிற்சி நெறியை தொடர்கின்றனர்.

யாழ். போதனாவைத்திய சாலை ஊழியர்கள் இம்முறை பயிற்சி நெறிக்குத் தெரிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது [ஓ-14-15]

பதவி உயர்வுடன் செல்லும் பணிப்பாளர்

# வன்னி கல்வித் தேவைகள் குறித்து அதிக சிரத்தை செலுத்த வேண்டும்

## பிரியாவிடை விழாவில் இளங்குமரன்

வவு.தெற்கு ஏப் 1

"தமிழீழத்தில உள்ள வன்னி மாவட்டத்தில் கல்வித தேவைகள் இன்று அதிகம் உள்ளன. பதவி உயர்வு பெற்று செல்லும் கல்விப் பணிப்பாளர் செல்வி பெரிய தம்பி தமிழீழத்தின் முழுக் கல்வி வளர்ச்சிக்கும் பொறுப்பாக இருந்து செயற்படுவதோடு வன்னிமாவட்ட கல்வி தேவைகளை நிறைவு செய்வதில் அதிக கவனம் எடுக்கவேண்டும்."

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் செல்வி இ. பெரியதம்பி வடக்கு- கிழக்கு மாகாண கல்விபணிப்பாளராக பதவி உயர்வு பெற்று செல்வதை முன்னிட்டு நடத்தப்பட்ட பிரியாவிடை விழாவில் கலந்து கொண்டு விழாவில் உரையாற்றிய தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவைப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் இவ்வாறு கூறினார்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள முகாமைத்துவ மண்டபத்தில் சேவைக்கால ஆசிரிய வள ஆளணியினரால் இவ்விழா நடத்தப்பட்டது.

ஓய்வுபெற்ற இணைப்பாளர் திரு. எம் .எஸ் ஸ்ரீ தயாளன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு வே. இளங்குமரன் மேலும் கூறியதாவது; —

கல்விப் பணிப்பாளர் செல்வி பெரியதம்பி தமிழீழ மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் காட்டிவரும் பெரு அக்கறை பாராட்டப்பட வேண்டியதாகும். கல்விப் பணிப்பாளர் கற்றல், கற்பித்தல் நுட்பங்களை யாழ்ப்பாணத்தில் துரிதமாக்கியதோடு ஆசிரியர்கள் பாடத் திட்டங்களை முழுமையாக விளங்கி கற்பித்தலை மேற்கொள்ளவும—

செயல்முறை கல்வி மூலம் மாணவர்களின் அறிவை விருத்தியாக்கவும் ஆசிரிய ஆலோசகர்களை பெரும் பங்கேற்க வைத்தவர் எனவும் கூறினார்.

வடக்கு- கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி இ. பெரியதம்பி தமது உரையின் போது—

மொழிவளம், இலக்கண அறிவு போன்ற தமிழ் மாணவர்களிடையே வளர்ச்சியடைய வேண்டும். ஆரம்ப கல்வி வளர்ச்சியில் சகல ஆசிரியர்களும் பங்கேற்று செயல்பட வேண்டும்

எல்லாப் பாடங்களிலும் மாணவர்கள் செயல்முறை தேர்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அப்போது அவர்களின் திறன்கள் வளர வாய்ப்புகள் ஏற்படும் எனக் கூறினார்

திரு எம் எஸ் ஸ்ரீ தயாளன் தமது தலைமையுரையில் —

கல்வி அபிவிருத்தியோடு தொடர்புடையவர்களாகவும், பாடசாலை நிர்வாக விடயங்களில் தேர்ச்சியுடையவர்களாகவும் சேவைக்கால ஆசிரியர்களை இணை வைத்து அதற்கான கல்வி நிர்வாக பயிற்சிகளை வழங்கி கல்வி நிலையில் முன்னேற்றம் காணவைத்தவர் எமது கல்விப் பணிப்பாளர் என கூறினார்

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களான திரு. வி. கே. பாலசுப்பிரமணியம், செல்வி நா. வேலுப்பிள்ளை, திருமதி பாலசுப்பிரமணியம் திரு எஸ் செல்வரத்தினம் திரு. கே. கயிலைநாதன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர் (ஓ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி அம்பலவாணர்
(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்)

காரைநகர், களவிலிப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும், 349, நாவலர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சின்னத்தம்பி அம்பலவாணர் நேற்று (31-3-95) காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும், திலகவதி, தேவகுமாரி (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட 3 ஆம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஈஸ்வரநாதனின் (வர்த்தக வங்கி, கொழும்பு) அன்பு மாமனாரும், தேவகாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 2-4-95 அன்று காலை 8 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
அ. அன்னபாக்கியம்
(மனைவி)

349, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோவிலடி),
யாழ்ப்பாணம்.

(சி 878)

### திருமதி
### கோவிந்தபிள்ளை தெய்வானைப்பிள்ளை

அரியாலையைச் சேர்ந்த கண்மணி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி கோவிந்தபிள்ளை தெய்வானைப்பிள்ளை நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை கோவிந்தபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், கார்த்திகேசு புவிராசசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லம்மா, கனகம்மா, சிவசோதி, கோபாலசிங்கம் (போதனாவைத்தியசாலை-யாழ்ப்பாணம்) குலசிங்கம், குமாரசிங்கம், ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான திருஞானசுந்தரம், துரைராசா பத்மநாதன் மற்றும் பதமரஞ்சனி (போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), ருக்மினி, புஸ்பா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று சனிக்கிழமை [01-04-95] பி.ப 4 மணிக்கு 30/1 மலர்மகள் வீதி, அரியாலையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கோ. கோபாலசிங்கம்
(மகன்)

[35990]

### விசுவநாதர் நடராசா
[இளைப்பாறிய P. W. D இலிகிதர்]

மாதகல் மேற்கை பிறப்பிடமாகவும், தற்பொழுது மட்டுவில் தெற்கில் வசிப்பவருமாகிய விசுவநாதர் நடராசா நேற்றுக் காலமானார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், இராசேஸ்வரி [சுவிஸ்], நித்தியானந்தன் [ப. நோ. கூ. சங்க ஊழியர் பண்டத்தரிப்பு] சற்குணானந்தன் [டென்மார்க்], நாகேஸ்வரி, இரகுதிகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவஞானசுந்தரம் [சுவிஸ்] ஜெயமனோகரன், தனலட்சுமி, ஜெயராணி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவனேஸ்வரி (சுவிஸ்), சிவசேகரன் (சுவிஸ்), ஞானசேகரன் [சுவிஸ்], இராசசேகரன் [சுவிஸ்], மாலதி, நிரஞ்சன், தர்சன், நிதர்சன் ஆகியோரின் பேரனாரும், காலஞ் சென்றவர்களான சரவணமுத்து, சதாசிவம், மார்க்கண்டு வள்ளிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் காலஞ் சென்ற மகேஸ்வரன் [ஸ்ரீமுருகன் ஸ்ரோஸ் வவுனியா], மற்றும் இராசேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 01-04-95 பி. பகல் 2 மணிக்கு மட்டுவிலில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நித்தியானந்தன்,
[மகன்]

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி,

[35991]

# காலத்தையும் கடந்து சிந்தித்தவர் செல்வா

## பிறந்த தின நினைவுவைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், ஏப் 1

தந்தை செல்வாவின் வாழ்க்கைக் காலத்தின் இறுதியில் அறிமுகப் படுத்தப்பட்ட ஓர் உயரிய சொற்பதம் தமிழீழம் என்பதாகும். காலத்துக்குக் கட்டுண்டு வாழ்ந்த இம்மனிதர் காலத்தைக் கடந்து சிந்தித்தார் என்பதற்கு அது ஓர் எடுத்துக் காட்டாக இருக்கிறது.

இவ்வாறு தந்தை செல்வாவின் 97 ஆவது பிறந்த தினத்தை யொட்டி சுண்டிக்குளி பரியோவான் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலிப் பூஜையில் பங்கேற்று உரையாற்றிய யாழ். பல்கலைக் கழக கிறிஸ்தவ நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் வண. சந்திரகாந்தன் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசியதாவது:-

ஓர் இனம் அடக்கப்பட்டு இன்னொருவரால் ஆளப்பட்டு தன்னுடைய வளர்ச்சியை தானே நிர்ணயித்து முன்னேறுவதற்கு தடைகள் ஏற்படுகின்ற போது. அந்த இனம் துணைக்குத் தானே ஓர் ஆட்சியை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தன்னுடைய கலாசாரத்தை —

தான் இவ்வுலகில் ஆற்ற வேண்டிய பங்களிப்பை — நிதானத்தோடு நீதியோடு நேர்மையோடு சிந்திக்க வேண்டும் என்பதற்காக அஹிம்சைப் போராட்டத்தின் வழியாக இந்த இலட்சியத்தை அடையவேண்டும் என்பதை அவர் முன்வைத்தார்.

தமிழீழம் ஒன்றை அமைக்க வேண்டும் அது தனித்தமிழ் நாடாக இருக்க வேண்டுமென்று அரசியல் அரங்கத்திலே தனது தள்ளாடும் வயதில் கூட தளராத உணர்வோடு அவர் உறுதியாக உரமாக இதற்காக வாதாடினார்.

இந்தச்சொல் இன்று பரவலாக எல்லோராலும் பேசப்படும் ஒரு சொல்லாக அமைவதோடு மட்டுமல்லாமல் அவரது அரசியல் யதார்த்தத்தின் தீர்க்கதரிசன வீச்சு இன்று எவ்வளவு தூரம் எம்மை நிஜமான அந்த நிலைக்கு இட்டுச் செல்கின்றது என்பதை எமது காலத்தின் யதார்த்தத்தின் அடிப்படைகளைப் பார்க்கின்ற போது தெளிவாக விளங்குகின்றது

தந்தை செல்வா, ஒரு இனத்தின் தந்தையாக மிளிர்ந்தார் என்பது உண்மையாயினும், தமிழினம் தன்மான உணர்வோடு வாழ வேண்டும் என்ற உறுதிப்பாட்டுக்கு. இந்த கருத்துகளுக்கு, இந்த இலட்சியத்துக்கு அவர் தந்தையாக இருந்தார்.

இப்படி அவர் கூறினார் தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் யாழ். ஆயர் டி. ஜே. அம்பலவாணர் அங்கு உரையாற்றுகையில், தந்தை செல்வா 1950 ஆம் ஆண்டு காலப் பகுதியில் புதிய கட்சியை ஆரம்பித்து சமஷ்டி கேட்டபோது அப்போதைய புத்தி ஜீவிகள், அரசியல் வாதிகள், பத்திரிகையாளர்கள் கேலி செய்தனர். அவர் அமைத்த கட்சி பின்னர் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்து அப்போதைய அரசுகளுடன் ஒப்பந்தம் செய்யுமளவிற்கு முன்னேறி இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும்.

இதற்கு தந்தை செல்வாவின் தன்னை தன் இனத்துக்காக அர்ப்பணிக்கும் உயரிய தலைமைத்துவம் பண்பே காரணமாகும் என்றார்.

(இ-7)

### 59 பேர் பலி

றுமேனியாவின் புக்காரெஸ்ட் நகரில் இருந்து பயணிகளுடன் புறப்பட்ட விமானம் ஒன்று வானில் தீப்பற்றி வெடித்துச் சிதறியதில் அதில் பயணம் செய்த 59 பேரும் உயிரிழந்தனர்

றுமேனியாவில் இருந்து பிறசல்ஸ் நோக்கிப் புறப்பட்ட சிறிது நேரத்தில் இந்த விபத்து இடம் பெற்றது.

[ஐ-7]

### அடுத்த-
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வது ஒரு முக்கிய பிரச்சினை என்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கு அரசு பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தாராளமாக நடமாடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடபகுதியில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடை ஓரளவுக்கு நீக்கப்பட்டுள்ளது. பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதும் மேலும் வசதிகளை வழங்குபற்றி ஆராய முடியும் என்றும் ஜனாதிபதி கூறினார். (இ-3)

### ஊர்தி...
(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதியுடன் முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தும் மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் அனைவரும் வரி அட்டையைப் பெற்றுக் கொள்ளும் வசதி கருதி இக்கால எல்லை எதிர் வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மோட்டார் ஊர்தி உரிமையாளர்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத் தருகின்றனர்

இப்படி போக்குவரத்துக் கண்காணிப்புக் குழுவின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

### மண்டூரில் பொலிஸார்---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைப புலியா' எனக் கேட்டனர்.

அதற்கு அப்போராளி தாம் விடுதலைப் புலிகள் உறுப்பினர் என்பதை ஆதாரபூர்வமாக நிரூபித்தார்.

இதன்பின் மேற்படி போராளியை தகாத வார்த்தைகளில் பேசிய பொலீசார் அவரது சைககிளை காலால் உதைத்துத்தள்ளினர். இதனைக் கண்ட போராளி "உங்களைத் தாக்கும்படி எங்களுக்குக் கூறவில்லை ஆனால் நீங்கள் என்னைத் தாக்கினால் நான் 'சயனைட்' அருந்தி இறப்பேன்" என்று சொன்னார்.

இதனைப் பொருட்படுத்தாத பொலிசார் தாம் வைத்திருந்த தடியால் போராளியைத் தாக்கினர்.

அந்த அவமதிப்பை தாங்க முடியாமல் லெப். சிறினிவாசன் சயனைட் அருந்தி வீரச்சாவுற்றார்.

மண்டூரைச் சேர்ந்த தம்பிராசா நவநீதன் என அழைக்கப்படும் லெப். சிறினிவாசன் என்ற போராளியே மேற்படி சம்பவத்தில் வீரச்சாவடைந்தவர் ஆவார்.

இந்த மோதல் தவிர்ப்பு மீறலைக் கடுமையாகக் ஆட்சேபித்து தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்

அக்கடிதத்தின் விவரம் வருமாறு:

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூரில் 1995 மார்ச் 29 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் ஸ்ரீலங்கா பொலிசாரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டதன் விளைவாக தற்கொலை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட சம்பவம் குறித்து, எங்கள் மிகப்பலமான ஆட்சேபத்தைத் தெரிவிக்குமுகமாக இதனை எழுதுகிறேன்.

சிறினிவாசன் என்ற எங்கள் போராளி குறுமண்வெளிப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸாரினால் எதுவித காரணமுமின்றிக் கைது செய்யப்பட்டுள்ளார்

சிறினிவாசன் தன்னை ஒரு விடுதலைப் புலிப் போராளி என்று இனங்காட்டிய பின்பும்—

தாம் தாக்கப்பட்டால் நஞ்சருந்தி இறக்கப்போவதாக எச்சரித்தபோதும்— பொலீஸ்காரர் அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இந்த அவமதிப்பின் விளைவால் அந்தப் போராளி சயனைட் அருந்தித் தற்கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம், பாரதூரமான மோதல் தவிர்ப்பு மீறல் என்று நாம் கருதுகிறோம்.

இதுபோன்று இனிமேலும் சம்பவங்கள் நடக்காபவிருக்க உறுதி செய்யும் விதத்தில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்— என்று உள்ளது.


யாழ். றோட்டறிக் கழகம் வழங்கும்

## இலவச தொழிற் பயிற்சி

யாழ்ப்பாணத்தின் பிரபல தொழில் நிறுவனங்கள் தொழிற் பயிற்சி கல்லூரிகள் ஆகியவற்றின் உதவியுடன் கீழ்க்காணும் இலவச தொழிற் பயிற்சிகள் வழங்கவுள்ளோம்.

* அச்சுக்கோர்த்தல்
* அச்சு இயந்திரம் ஓட்டுதல்
* புத்தகம் கட்டுதல்
* எழுதுவினைஞர்
* தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்)
* ஒட்டுவேலை (Welding)

பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்கால கொடுப்பனவுகள் வழங்கப்படும் மேற்படி பயிற்சி பெறவிரும்புபவர்கள் தங்கள் கல்வித் தகைமை, முன்னைய அனுபவம்' தாங்கள் விரும்பும் பயிற்சி என்பனவற்றை குறிப்பிட்டு 14-04-95 க்கு முன்பதாக கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

தலைவர்
யாழ். றோட்டறிக் கழகம்

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

(சி-879)


## மரண அறிவித்தல்கள்

### பிரம்மஸ்ரீ. ப. தாமோதரஐயர்

பிரம்மஸ்ரீ ப. தாமோதரஐயர் 30-3-95 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

இவர் ஈழத்துச்சிதம்பரம் பிரதமகுரு சிவஸ்ரீ. க. மங்களேஸ்வரக் குருக்களின் அன்பு மருமகனும், கௌரி அம்மாவின் அன்புக் கணவரும் இரவீந்திரசர்மா, மஞ்சுளா, வாசுதேவன் (கனடா), ஸ்ரீதரன் (கனடா), திருமதி. K சுபத்திராதேவி, ராதா, முகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இ ஹேமராணி, வா. உமாரஜனி, கேசவசர்மா ஆகியோரின் அன்பு மாமனாரும் உமாசுதன், தாரணி, கோபிநாதன், சுதாகரன், ராகுலன் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31-3-95 வெள்ளிக்கிழமை குடியிருப்பு சுழிபுரத்தில் நடைபெற்றன, இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தா. கௌரி அம்மா
(மனைவி)

குடியிருப்பு சுழிபுரம்.

(35988)

### சந்தியா செபஸ்தி
(கட்டட ஒப்பந்தகாரர்)

குளம்மன்கால் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்தியா செபஸ்தி நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், கீதபொன்கலன், ராஜகுமார் (பாறெய்ன்), லூர்து சத்தியவதி, ஜெசிந்தா புஸ்பமாலா (உபதபாலதிபர், கணேஸ்வரம்) மேரி றஞ்சிதமலர், மேரி மக்டலின் இராசாத்தி, மேரி மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜேசுராஜா, நவரட்ணலிங்கம், விஜயகாந்தராஜா, காலஞ்சென்ற சவுந்தரநாயகம், மற்றும் சந்திரசோதி, றோசாலி, அல்பிறா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (1-4-95) சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து குளம்மன்கால் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
செ. கீதபொன்கலன்
(மகன்)

குளம்மன்கால்,
மல்லாகம்.

(35978)


07 - 04 - 1995 காலை 10 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில்:

1890 இந்துவின் நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா 1990

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

யாழ். இந்துக்கல்லூரி
01-04-1995

அதிபர்
மலர்க்குழு சார்பாக

சிறப்பர்சங்களைத் தாங்கி சிறந்து மலரும் நூற்றாண்டு மலரை வாழ்த்தி மகிழ்கின்றேன்.

(சீ/877)

-- கனகசபை தர்மகுலசிங்கம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01 - 04 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.